# பாக்யா

இதழ்-04 சித்திரை 01 - 2006





## சொல்லுவது ஒன்று! செய்தது ஒன்று

மிட்டாய்க் கடையில் அழகாக மைசூர்ப்பாகு அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது. கடைக்கு வந்த ஒருவர் 'என்ன மைசூர்பாகு இன்று போட்டதா? புதிதா? என்று கேட்டார்.

இந்தக் கடையில் எல்லாமே புதிதுதான் பழைய இனிப்பு வகைகளே கிடையாது என்றார் கடைக்காரர்.

எவ்வளவு அழகாக மைசூர்பாகு அடுக்கி இருக்கீங்க. இதற்கே ஒரு நாள் ஆகி இருக்குமே" என்று கேட்டார் வந்தவர். "ஒருநாளா? மூன்று நாள் அல்லவா ஆயிற்று. இப்படி அடுக்கி வைக்க" என்றார் கடைக்காரர்.





## மாறிவரும் மருத்துவம்

"இரவு நல்ல தூக்கம் வருவதற்கு என்ன செய்ய வேண்டும் டாக்டர்? படுப்பதற்கு முன் சூடாக ஒரு டம்ளர் பாலும் ஒரு அப்பிள் பழமும் சாப்பிடுங்கள்.

"டாக்டர் மூன்று மாதத்துக்கு முன்னால் கேட்டபோது வெறும் வயிற்றோடு படுக்கச் சொன்னீர்களே".

"இந்த மூன்று மாதத்திலே மருத்துவ ஆராய்ச்சி எந்த அளவுக்கு வளர்ந்திருக்கு தெரியுமா?



## பாஸ் பண்ண முடியாத பி.ஏ



"உங்க பையன் என்ன பண்றான்?"

"பி.ஏ. ரெண்டாவது வருடம் படிக்கிறான்".

"இந்தக் காலத்துப் பிள்ளைங்க எங்க ஒரே ஆண்டில் பாஸ் பண்ணுதுங்க"

27



01.04

# பாக்யா

இதழ் -4 அறிவுப் புதையல்

## சிறுவர் மாத இதழ்

ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.


ஆசிரியர்
S.இராஜகுலேந்திரன்

ஆசிரியர் குழு
R.ஜெகதீஸ்வரன்
K.பகீரதன்
Miss.S.சின்னத்துரை
P.N.சுதர்சன்
Mrs.S.பாலசுப்பிரமணியம்
Mrs.T.லிங்கேஸ்வரன்
J.பிரதீபன்
M.டொமினிக்ஜீவா
Mrs.S.சிவகுமார்

நிர்வாக
ஒருங்கிணைப்பாளர்
பாக்யா

ஓவியம்
M.டொமினிக்ஜீவா
S.விஜயாலயன்

கணனி வடிவமைப்பு
அச்சுப்பதிப்பு
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

வெளியீடு
பாக்யா காகிதாதிகள்
இல.121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
தொ.பே:077 3053129


பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1) | சித்திரைப் புத்தாண்டு | 02 |
| 2) | கணனி தொடர்பில் செய்யக்கூடாதவை | 04 |
| 3) | புதிர் வினாக்கள் | 07 |
| 4) | இலங்கை வரலாறு | 08 |
| 5) | புலவரும் சிலேடையும் | 11 |
| 6) | கர்நாடக சங்கீதம் | 14 |
| 7) | English language mode exam question | 17 |
| 8) | எல்லாம் ஒன்றாகுமா | 21 |
| 9) | நடன முத்திரைகள் | 25 |
| 10) | இராமாயணம் | 29 |
| 11) | சிறுவர்களது உரிமைகளும் கடமைகளும் | 32 |
| 12) | பொது அறிவு | 34 |
| 13) | கன்றுகளை மாற்றினான் | 38 |
| 14) | நெருப்புக் காய்ச்சல் | 43 |
| 15) | இயற்கை அனர்த்தங்கள் | 46 |
| 16) | சோர்க் வர்ணம் | 49 |
| 17) | அறிவுக்குச் சோதனை | 51 |
| 18) | அறிந்து கொள்ளுங்கள் | 55 |


துளிர்கள்
THULIRGAL

மாணவர்களே!
உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்
தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

# சித்திரைப் புத்தாண்டு

பொழுதானது இரு வகைப்படும். காலை, நண்பகல், மாலை முதலான காலங்கள் "சிறுபொழுது" என்றும் இளவேனில், முதுவேனில், கூதிர், கார், முன்பனி, பின்பனி ஆகிய ஆறு பிரிவுகளை உடையது. "பெரும்பொழுது" என்றும் வகுக்கப் படுகிறது.

நம் நாட்டிலே பசியும் பிணியும் நீங்கி வசதியும் வளமும் பெருகும் மகிழ்ச்சிக்குரிய காலம் இளவேனிற் காலம். இள வேனிற் காலத்தின் முதலாவது மாதம் சித்திரை. அக்காலத்திலே சூரியன் மேட இராசியிற்புகும். அந்தக் காலத்திலே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. இது தமிழருக்கு மட்டுமன்றி சிங்களவர் களுக்கும் உரிய புத்தாண்டாக அமைகின்றமை குறிப்பிடத் தக்கது.

சோதிட வல்லுநர் கூற்றை ஏற்று அவ்வருடங்களுக்குரிய கருமங்களை சிரமேற்கொண்டு அநுட்டிப்பர். புத்தாண்டு அன்று மருத்து நீர் வைத்து மங்கல நீராடிப் புத்தாடை அணிந்து திருக்கோவிலுக்கு மங்கலப் பொருள்களுடன் சென்று வழி படுவர். வீட்டுக்குத் திரும்பியதும் விசேடமாகச் சமைக்கப்பட்ட உணவை உற்றாருறவினருடன் உண்டு மகிழ்வர். புத்தாண்டு விருந்திற்கு என முக்கியமாகச் சேர்த்துக் கொள்ளும் ஒருவகைப் பச்சடி மிகவும் அருமையான வாழ்க்கைத் தத்துவத்தைத் தன்னுள் அடக்கியுள்ளது. அந்தப் பச்சடியானது கசக்கும் வேப்பம் பூவையும், புளிக்கும் மாங்காயையும், இனிக்கும் சர்க்கரையையும் சேர்த்துச் செய்யப்பட்ட ஒன்று. வருடம் பிறக்கும் அன்றே வாழ்வானது கசப்பும், புளிப்பும், இனிப்பும் கலந்துள்ளதென்பதை மறக்க முடியாத முறையில் எமக்கு நினைவூட்டுவதற்குப் போலும் எம்முன்னோர் இப்பழக்கத்தை ஏற்படுத்தினார்.

இயற்கையில் நடைபெறும் மாற்றங்களெல்லாம் சூரியனின் நிலைகொண்டு கணிக்கப்படுவதால், புதுவருடப் பிறப்பன்று

சூரியனுக்குப் பொங்கிப் படைக்கும் வழக்கமும் உண்டு. இனி மையான சர்க்கரைப் பொங்கலைப் பொங்கி வாழ்வு இனிமை யாகவே இருக்க வேண்டும் என்றும் நாம் விரும்புகின்றோம்.

புத்தாண்டு பிறந்த பின் முதலில் அமையும் சுபதின சுபநேரத்தில் "கைவிசேடம்" பரிமாறல், புதுக்கணக்குப் பதிதல், நாள் வியாபாரம் தொடங்கல், ஏர்மங்கலம், புதுவிதைப்பு, புதிதெடுத்தல், வித்தியாரம்பம் என்னும் கருமங்களைத் தொடங்கும் வழக்கம் தமிழ் மக்களிடம் உள்ளது.

இன்று நவீன விளையாட்டுக்கள் எம்மத்தியில் செல்வாக்குப் பெற்று எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் அருகிச் செல்வது கண்கூடு. எனினும் தமிழ் கிராமங்களின் மணம் வீசும் வகையில் இன்றும் புத்தாண்டை ஒட்டியதாக போர்த்தேங்காய் அடித்தல், கிளித்தட்டு, மாட்டு வண்டிச் சவாரி, கைகொடிச் சவாரி முத லான நிகழ்வுகளை நடாத்தி களிப்புற்று வருகின்றமை குறிப்பி டத்தக்கது.

இப்பண்டிகையன்று மதுரை மீனாட்சி அம்மன் ஆலயக் கருவறையின் மேல் சூரியன் நேராக உச்சங்கொடுக்கின்றமை வானநூலும் சமயமும் இணைந்து செயல்படுகின்றமையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

இப்பண்டிகையானது நம்மத்தியில் கூட்டுவாழ்வு, உறவு பகிர்வு, எழுச்சிபெறல் முதலான நற்பண்புகளை உருவாக்க உந்துசக்தியாக அமைகின்றது எனலாம்.

த.தயானந்தன்



# கணனி தொடர்பில் செய்யக் கூடாதவை

- கணனி அறை அழுக்காக இருக்கக் கூடாது.
- கணனியைப் பாதுகாப்பாக மூடிவைக்காது, அறையைக் கூட்டிப் பெருக்குதல், தூசுதட்டுதல் கூடாது.
- கணனி இயங்கிக் கொண்டிருக்கும் போது வயர்களையோ, கேபிள்களையோ தொடக் கூடாது.
- கணனிக்கு அருகில் நீர், தேநீர் முதலிய பதார்த்தங்களை வைக்கக் கூடாது.
- கணனியைச் சூழ பெரும் தொகையானோர் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.
- கணனி அறையில் புகைத்தல், ஊதுபத்தி ஏற்றுதல், சாம்பிராணி காட்டுதல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.
- தூசு மற்றும் அழுக்குடன் கூடிய பாத அணிகளுடன் கணனி அறையினுள் பிரவேசிக்கக் கூடாது.
- கணனியின் விசைப்பலகையின் (Keyboard) பொத்தான் களைக் கடுமையாக அழுத்தக்கூடாது.
- காந்தப் பொருட்களை கணனி மீது அல்லது அதற்கு அருகில் வைக்கக் கூடாது.
- திரைக்கு மிக அருகில், அதாவது 80cm தூரத்திற்குள் கண்களை வைத்துப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- Floppy diskette ஐ கணனி மீது வைக்கக்கூடாது.
- Floppy diskette ஐ வளைக்கக் கூடாது.
- Floppy diskette இல் பாதுகாப்பு உறையினுள் உள்ள வட்டத் தட்டை விரலினால் தொடக்கூடாது.
- கணனி அறையின் வெப்பநிலை கடுமையாக உயராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். (மின் விசிறி மற்றும் A/C வசதிகள் செய்தல் சிறந்தது.)
- கணனியைக் காற்றோட்டம் இல்லாத பெட்டியினுள் வைத்து இயக்குதல் கூடாது.
- கணனி இயங்கிக் கொண்டிருக்கும் போது அதை நகர்த்தக் கூடாது.

- கணனியை ஈரத்துணியினால் அல்லது சோப் நுரையினால் சுத்தம் செய்ய முயற்சிக்கக் கூடாது.
- கணனி மேசையை எறும்பு மற்றும் ஏனைய பூச்சி வகைகள் அண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- கணனி மேசையில் மலத்தியோன் முதலிய தூள்களைத் தூவக்கூடாது.
- கணனிக்கு வழங்கப்படும் மின்சாரம் ஏற்ற இறக்கத்துடன் இருக்கக்கூடாது.
  (Stabilizer களைப் பயன்படுத்தலாம்)
- கணனிக்கு வழங்கப்படும் மின்சாரம் சடுதியாக நிறுத்தப் படக்கூடாது.
  (UPS களைப் பயன்படுத்தலாம்)
- கணனி இயங்கிக்கொண்டிருக்கும் போது அதன் பாகங் களைப் பொருத்துவதோ அகற்றுவதோ கூடாது.
- அழுக்கான மேற்பரப்பில் சுட்டியை (mouse) நகர்த்துவது கூடாது.
- சுட்டியின் பொத்தான்களை அதிகமாக அழுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
- கணனி இயங்காதபோது அதைத்திறந்து வைத்திருத் தலாகாது.
  (சுத்தமான துணி ஒன்றினால் மூடிவைக்க வேண்டும்)
- கணனி இயங்குகின்ற போது அதனை மூடிவைத்தி ருத்தலாகாது.
- கணனியை இயக்க ஆரம்பிக்கும் போது ஒரு தடவைக்கு மேல் பீப் (beep) ஒலி கேட்கக்கூடாது.
  (உடனே அதற்கான காரணத்தைக் கண்டறிந்து திருத்த வேண்டும்)
- கணனி மேசை மற்றும் கதிரை பொருத்தமற்ற உயரங் களுடன் இருக்கக்கூடாது.
- திரையைக் கண்மட்டத்துக்கு மேலே வைக்கக்கூடாது.
- அச்சுப்பதிப்பான்களில் (printer) பொருத்தமற்ற தாள் களைப் பயன்படுத்தக் கூடாது.


- இயலுமானவரை வடிகட்டிக் கண்ணாடி (Filter Glas) இன்றி திரையைப் பார்க்கக் கூடாது.
- CDக்களைத் துப்பரவு செய்யும்போது ஈரத்துணி, சோப்நுரை முதலியவைகளைப் பயன்படுத்தலாகாது. (சுத்தமான உலர்ந்த துணி போதுமானது)
- CDக்களைத் துப்பரவு செய்யும்போது வளையம் வளையமாகத் துடைப்பது கூடாது. (உள்ளிருந்து வெளிநோக்கி ஆரைவழி துடைக்க வேண்டும்)

மேலும் சில பயனுள்ள குறிப்புகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

ஜெ.பிரதீபன், B.Sc(Hons), Lecturer in Information Technology,
Sri Lanka Institute of Advanced Technological Education.

**இந்தத் தொடரானது பத்துத்தொடக்கம் பதினைந்து வயதுக்குஉட்பட்ட மாணவரை கருத்திற்கொண்டு எழுதப்பட்டாலும் கணனி பற்றிய அறிமுகம் தேவையானோர் அனைவரும் இத்தொடரைத் தொடர்ந்து வாசித்துப் பயன்பெறலாம்.**

## நிறந்தீட்டுங்கள்



**ஆறுவித்தியாசத்திற்கான விடைகள்**

1) பலூன்
2) பணிப்பெண்ணின்தலை
3) மேசையில் உள்ள போத்தல்
4) அலுமாரியின் கால்
5) அலுமாரியின் மேல் உள்ள குருவி படம்
6) பெட்டியில் உள்ள ஆங்கில எழுத்து

# புதிர் வினாக்கள்

1. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு கார் இரண்டரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தது. ஆனால் அதே கார் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்வதற்கு நூற்றி ஐம்பது நிமிடங்கள் ஆயின. காரின் வேகமும் குறைய வில்லை, வழியில் தடங்கல் ஏதும் இல்லை.
   அதற்கு என்ன விளக்கம் தரமுடியுமா?
2. திருடன் ஒருவன் நாள் ஒன்றுக்கு 20கிலோ மீற்றர் ஓடக்கூடியவன். அவனைப் பிடிக்க வந்த காவலனோ முதல் நாள் ஒரு கிலோ மீற்றர், இரண்டாம் நாள் இரண்டு கிலோ மீற்றர், மூன்றாம் நாள் மூன்று கிலோ மீற்றர், இப்படியே நாளுக்கு நாள் ஒரு கிலோ மீற்றர் அதிகமாக ஓடக்கூடியவன். அப்படியானால் காவலனிடம் திருடன் எத்தனையாவது நாள் பிடிபடுவான்?
3. ஒரு பெரிய ஆலமரத்தில் நூறு குருவிகள் அமர்ந்திருந்தன. அங்கு வந்த வேட்டைக்காரன் ஒருவன் நூறு குருவிகளில் ஒன்றைச் சுட்டு வீழ்த்தினான். அப்படியானால் அந்த மரத்தில் மீதி எத்தனை குருவிகள் இருக்கும்?
4. ஒரு குளத்தை நாடிப் பல குருவிகள் பறந்து வந்தன. அக்குளத்தில் தாமரைப் பூக்கள் பல மலர்ந்திருந்தன. ஒரு பூவிற்கு ஒரு குருவி என்று அமர்ந்த போது ஒரு குருவிக்கு மட்டும் அமர்வதற்குப் பூ இல்லை. ஆகவே ஒரு பூவிற்கு இரண்டு குருவிகள் வீதம் எல்லாக் குருவிகளும் அமர்ந்தன. இப்போது ஒரு பூ எஞ்சியிருந்தது. அப்படியானால் அங்கு வந்த குருவிகள் எத்தனை? அக்குளத்தில் இருந்த பூக்கள் எத்தனை?
5. நான்கு முழ வேட்டியை நான்கு ஓரடித் துண்டுகளாக வெட்ட முடியும். அப்படி நூறு ஓரடித் துண்டுகள் கிடைக்க வேண்டுமானால் வேட்டிகளில் எத்தனை வெட்டுக்கள் வெட்ட வேண்டும்

விஜயனுக்கு பின்பு இலங்கையை ஆட்சி செய்த மன்னன் பண்டுவாசுதேவனாவான். உபதிஸ்ஸ கிராமத்து மன்னனான பண்டுவாசுதேவனின் அரசியின் பெயர் பத்தகச்சானா ஆவர். பத்தகச்சானா கிழக்கு இந்தியாவில் இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு பத்து ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்குழந்தையும் பிறந்தன. இப்பெண்குழந்தைக்கு பெயர் சித்திரா ஆவர். சித்திரா ஓர் அழகி அவளைக் கண்டவர்கள் மதிமயங்குமளவுக்கு அவள் அழகு மிக்கவள் என்ற காரணத்தினால் அவள் "உன்மாத சித்திரா" எனப்பட்டாள்.

இளவரசி சித்திராவின் பிறந்த நேரத்தைக் கணித்துப் பலன் கூறிய சோதிடர் அவள் ஒரு மகனுக்குத் தாயாவாள்



எனவும் பிற்காலத்தில் அம் மகன் மாமன்மாரைக் கொன்று அரசனாவான் எனவும் கூறினார். அதனை அறிந்த அவளது சகோதரர்கள் அவளை ஒழித்துக்கட்ட தீர்மானித்தனர். எனினும் அவளது பெற்றோர் மூத்த சகோதரனான இளவரசன் அபய ஆகியோரது தலையீட்டினால் அவளது உயிர் பாதுகாக் கப்பட்டது. அவள் வெளியார் எவரோடும் தொடர்பு கொள்ள முடியாதவாறு ஒரு பிரத்தியேகமான கட்டத்தில் சிறைப்படுத்தி வைத்திருந்தனர்.

இக் காலத்தில் பத்தகச்சானா இராணியின் சகோதரர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து பல்வேறு பிரதேசங் களில் கிராமங்களை அமைத்தனர். இக்கிராமங்கள் அவற்றை அமைத்தவர்களின் பெயர்களாற் குறிப்பிடப்பட்டன. இச் சகோதரர்களுள் ஒருவரான தீக்காயு என்பவனுடைய மகனான தீக்க காமினி அநுராதபுரத்துக்கு வடக்கே இருந்த உபதிஸ்ஸ

கிராமத்துக்குச் சென்ற போது அங்கே அரண்மனைச் சேவையில் அமர்த்தப்பட்டான். அரண்மனைச் சேவையில் அமர்ந்திருந்த தீக்ககாமினிக்கு, உன் மாத சித்திராவைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவள் மேல் அளவிலாக் காதல் கொண்ட இவன் சித்தன் என்ற இடையனதும் காலவேலன் என்ற வேலைக் காரனதும் உதவியுடன் சித்திரா இருந்த அரணுக்குச் சென்று அவளுடன் உறவாடத் தொடங்கினான்.

இவர்கள் இருவரதும் உறவு காரணமாக உன்மாதச் சித்திராவுக்கு மகப்பேற்றுக்குரிய அறிகுறிகள் காணப்பட்டன. இரகசியமாக இருந்த உறவு அம்பலமானது. இவர்களுக்கு உதவியாக இருந்த சித்தனும், காலவேலனும் சித்திராவின் சகோதரர்களால் கொலை செய்யப்பட்டனர். கொலை செய்யப் பட்ட இருவரும் கணங்களாக உருவெடுத்துக் குழந்தைக்குப் பாதுகாப்பளித்து வந்தனர். உன்மாத சித்திராவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு "பண்டுகாபயன்" என்ற பெயர் சூட்டப்பட்டது. இவ் ஆண்குழந்தையை மாமன்மார்கள் கொன்று விடுவார்கள் என்பதனால் அக் குழந்தையை பாதுகாத் தற்பொருட்டு, மிகுந்தலைக்கு அண்மையிலிருந்த தொறமண் டலா என்ற கிராமத்துக்கு ஒரு வேலைக்காரி கொண்டு சென்றாள்.

வேலைக்காரி காட்டு வழியே சென்ற போது வேட்டை யாடச் சென்றிருந்த மாமன்மார் அவளை சந்தித்தனர். உடைக் குள் என்ன இருக்கின்றது? என்று அவர்கள் வினாவினார்கள். சொந்தக்காரருக்கு தான் "குடப்பு" (பலகாரம்) கொண்டு செல்வதாக வேலைக்காரி பதில் கூறினாள். கூடையை நிலத்தில் வைத்து திறந்து காட்டும்படி மாமன்மார் கட்டளையிட்டனர். இந்த வேளையிலே குழந்தையின் காவற் கணங்களான சித்தனும் கால வேலனும் காட்டுப் பன்றிகளாக வேடம் பூண்டு அங்கே சென்றனர். மாமன்மார் காட்டுப்பன்றிகளுக்கு பயந்து ஓடினர். இப்படியாகவே பண்டு காபயகுமாரனின் உயிர்முதல் முறை தப்பியது.

பண்டுகாபயனுக்கு ஏழுவயது நிரம்பியது. ஒரு நாள் அவன் தனது தோழர்களுடன் கிராமத்துக் குளம் ஒன்றில் இறங்கி நீரில் விளையாடிக் கொண்டிருந்தான். பண்டுகாபயன் விளையாடிக் கொண்டிருப்பதை அறிந்த மாமன்மார் அவனைக் கொல்லுவதற்கு ஆட்களை அனுப்பினர். குளத்தின் அருகில் நின்ற ஒரு பெரிய மரத்திலிருந்த ஒரு பொந்தினுள் நீரில் சுளியோடிச் செல்லும் வழியை அறிந்திருந்த பண்டுகாபயன் நண்பர்களுக்கு தெரியாமல் அப்பொந்துக்குள் ஒழிந்திருப்பது வழக்கம். அவ்வாறே அன்றும் ஒழிந்திருந்து இரண்டாவது முறையும் உயிர் தப்பினான்.

பண்டுகாபயனுடைய 12 ஆவது வயதில் அவனைக் கொல்லுவதற்கு 3ஆவது முறையாக அவனுடைய மாமன்மார் முயன்றனர். இடையர்களுடன் வேலை செய்து கொண்டிருந்த பண்டுகாபயன் ஏதோ ஒரு தேவையின் பொருட்டு நெருப்பு எடுத்து வரும்படி வீட்டுக்கு அனுப்பப்பட்டான். ஆயின் பண்டுகாபயனை. வளர்த்து வந்தவர்களுடைய மகனே வீட்டிலிருந்து நெருப்பைக் கொண்டு வந்தான். இந்தச் சந்தர்ப்பத்திலும் மாமன்மாரால் கொலை செய்ய முடியவில்லை. இதிலும் உயிர் தப்பினான் என வரலாறுகள் கூறுகின்றன.

திருமதி.தே.லிங்கேஸ்வரன், யா/இராமநாதன் கல்லூரி.

## ஏமாற்ற முடியாத முதலாளி

- ஏன்டா! டின்ல எண்ணெய் குறையுது டின் அடியில் சின்ன ஓட்டை இருந்திருக்கு நான்கவனிக்கலே

டேய்! டின்ல மேலேதான் எண்ணெய் குறையுது அடியில் ஓட்டை என்று கதை விட்டு என்னை ஏமாற்றவா நினைக்கிறாய்?



# புலவரும் ஸ்லேட்டும்

யாழ்ப்பாணத்திலுள்ள கிராமமொன்றில் புலவரொருவர் வாழ்ந்து வந்தார். அவர் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சிலேடையணியைப் பயன்படுத்தி நகைச்சுவையுணர்வும், குறும்புத்தனமும் மிக்கவராகத் திகழ்ந்தாரென்று செவிவழிக் கதைகள் கூறுகின்றன.

ஒருநாள் யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியொன்றிக்கு புலவர் சென்றார். வங்கியின் முற்பகுதியில் றோசாச்செடிகள் பூத்து அழகாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தன. வங்கிக்கு வருவோரில் சிலர் அச்செடிகள் மீது வெற்றிலை, பாக்கு, மென்ற எச்சிலைத் துப்பிவிடுவதும் உண்டு. இதனால் "இங்கே துப்பப்படாது" என்ற வசனம் எழுதப்பட்ட விளம்பரப் பலகையை பூச்செடிகளின் மத்தியில் நாட்டியிருந்தனர். இதனைப் புலவர் கண்டார். குறும்புத்தனம் வேலை செய்யத் தொடங்கியது. தெருவில் இருந்த கடைக்கு ஓடோடிச் சென்றார். வெற்றிலை, பாக்கு வேண்டி வாயிலிட்டு சப்பிக்கொண்டு வந்து, பூச்செடிகள் மீதும், விளம்பரப்பலகை மீதும் பலதரம் எச்சிலைத் துப்பிய வண்ணமிருந்தார். இதைக் கண்ணுற்ற பாதுகாவலர் புலவரை அழைத்துச் சென்று முகாமையாளர் முன்னிறுத்தி நடந்தவற்றையும் கூறினார். முகாமையாளர் புலவரைப் பார்த்து.

"ஐயா உங்களைப் பார்த்தால் படித்தவர் போல் தெரிகிறதே . அங்கே எழுதி வைத்துள்ளதை பார்த்து விட்டுமா இப்படிச் செய்தீர்கள்? என்று கோபமாகக் கேட்டார்.

"எழுதியவற்றை வாசித்து விளங்கிய படியாற் தான் அப்படிச் செய்தேன் என்று புலவர் அமைதி

யாகக் கூறினார்.

"என்ன? வாசித்து விட்டா அப்படிச் செய்தீர்கள்?"

"இங்கே துப்பப்படாது" என்று எழுதப்பட்டுள்ளது. எச்சிலைத்துப்பினால் எச்சில் செடிகள் மீதும் பலகையின் மீதும் "படுகிறதோ படவில்லையோ" என்று பார்ப்பதற்காகத் தான் துப்பினேன் என்றார் புலவர்.


புலவர் தன்னை மடையனாக்கி விட்டாரே என்ற உணர்வில் மூழ்கிப் போயிருந்தார் முகாமையாளர்.

இன்னொரு நாள் புலவர் சினிமாப்படம் பார்ப்பதற்கு "தியேட்டருக்கு" சென்றிருந்தார். நிலத்தில் பாயில் அமர்ந்திருந் தும் அல்லது கதிரையில் அமர்ந்திருந்தும் படம் பார்ப்பதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது பாய்க்கு ஐம்பது சதமும் கதிரைக்கு ஒரு ரூபாவும் கட்டணமாக வசூலித்தார்கள். இதனால் பாய் ஐம்பது சதம்; கதிரை ஒரு ரூபா எனக் குறிப்பிட்டிருந்தார்கள். புலவர் கட்டணம் செலுத்தி நுழைவுச் சீட்டை பெற்று கதிரை யில் அமர்ந்து படம் பார்த்தார். படம் முடிந்ததும் கதிரையையும் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தார். புலவருக்கும் தியேட்டர் உரிமையாளருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. "கதிரையில் அமர்ந்து படம் பார்ப்பதற்கு ஒரு ரூபா என்றா குறிப்பிட்டிருக் கிறீர்கள்? இல்லையே கதிரை ஒரு ரூபா என்று தானே குறிப்பிட் டிருக்கிறீர்கள் ஆகவே எனக்குத் தான் கதிரை என்று கூறிவிட்டு புலவர் கதிரையையும் தூக்கிக் கொண்டு வீடு சென்று விட்டார். தியேட்டர் உரிமையாளர் நீதி மன்றத்தில் புலவர் மீது வழக்குத் தொடுத்தார். நீதிபதி வழக்கை விசாரித்தார். புலவரின் குறும்புத் தனத்தை நீதிபதி விளங்கிக் கொண்டார். இனிமேல் உமது தலைக்சறுப்பு நீதிமன்றில் தெரியக்கூடாது என்று எச்சரித்து புலவரை அனுப்பி வைத்தார். மறுநாள் புலவர் தன் தலையின் மீது சட்டியொன்றைக் கவிழ்த்துக் கொண்டு நீதி மன்றில் அமர்ந்திருந்தார். இதைக் கண்ட நீதிபதி "யாரது, தலையில்

சட்டியை கவிழ்த்துக் கொண்டிருப்பது? " என்று கேட்டார். புலவரோ அமைதியாக அடக்கத்துடன் மெதுவாக எழுந்து நின்றார். புலவரைக் கண்டதும் இது என்ன குறும்புத்தனமோ என்று மனதில் நினைத்துக் கொண்டு புலவரே இது என்ன வேலை? என்று கேட்டார்.

"ஐயா என்னுடைய தலைக்கறுப்பு நீதிமன்றில் தெரியக் கூடாது என்று தானே நேற்று உத்தரவிட்டிருந்தீர்கள். ஆனால் சட்டிக் கறுப்பு தெரியலாந்தானே அதற்குத் தடை யில்லைத் தானே, அது தான் தலைக்கறுப்பை மறைத்துக் கொண்டு தலைமீது சட்டியைக் கவிழ்த்துக் கொண்டு வந்தேன் என்றார். நீதிமன்று முழுவதும் சிரிப்பின் ஓசை அடங்க ஒரு நிமிடமா யிற்று.

ஆ-ர்



# கர்நாடக சங்கீதம்

**ஸ்வரம் :**

ஸ்வரம் என்ற சொல்லிற்கு இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கின்ற ஒலி என்று பொருள். சங்கீதத்திற்கு ஆதாரமாக உள்ளவை ஸப்த (ஏழு) ஸ்வரங்கள். ஸரிகமபதநி இதனை ஸப்தகம் என்றும், ஸரிகமபதநிஸ் இதனை அஷ்டகம் என்றும் கூறுவர். ஸ்வரத்தை தமிழிசையில் தாது, கோவை என்றும் அழைப்பர். ஸப்த ஸ்வரங்களின் வடமொழிப் பெயர்களும், தமிழிசைப்பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் இல | சப்த ஸ்வரங்கள் | வடமொழிப் பெயர்கள் | தமிழிசைப் பெயர்கள் | பிராணிகளின் ஒலிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஸ | ஸட்ஜம் | குரல் | மயில் |
| 2. | ரி | ரிஷபம் | துத்தம் | ரிஷபம்(எருது) |
| 3. | க | காந்தாரம் | கைக்கிளை | ஆடு |
| 4. | ம | மத்திமம் | உழை | க்ரௌஞ்சம் |
| 5. | ப | பஞ்சமம் | இளி | கோகிலம்(குயில்) |
| 6. | த | தைவதம் | விளரி | குதிரை |
| 7. | நி | நிஷாதம் | தாரம் | யானை |

**திரியாங்கம்**

தாளத்தில் வரும் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கமாகும். ஷடாங்கத்திலும் முதல் மூன்று அங்கங்களாக வருகின்றன. அவையாவன அனுத்ருதம், த்ருதம், லகு என்பன.

**அனுத்ருதம்**

கையினால் ஒரு தட்டுத் தட்டினால் அது அனுத்ருதம் எனப்படும். இதன் அடையாளம் U ஆகும். இது பிறை, துடி என்றும் அழைக்கப்படும். இதன் அட்சர எண்ணிக்கை 1. எல்லா அங்கங்களிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையுடையது.

**த்ருதம்**

ஒரு முறை தட்டி வீசுதல் த்ருதம் ஆகும். இதன் அடையாளம் O ஆகும். இது மதி எனப்படும். இதன் அட்சரகாலம் 2.

**லகு**

ஒரு தட்டுத் தட்டி விரல்களை சின்ன விரலிலிருந்து ஒழுங்காக எண்ணுதல் ஆகும். இதன் அடை யாளம் l ஜாதியின் எண்ணிக்கை அடியில் இடப்படும். இது கணை எனப்படும். சாதாரணமாக லகு என்று சொல்லும் பொழுது 4 அட்சரங் களைக் கொண்ட சதுஸ்ர லகுவையே குறிக்கின்றது. லகு திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் என்னும் ஐந்து ஜாதிகளை ஏற்பதால் 35 தாளங்கள் ஏற்படுகின்றன. லகுவின் மொத்த அட்சரங்கள் மாறுபடும். திரியாங்கத்தின் அட்ட வணையை கீழே காண்க.

| இல. | பெயர் | குறியீடு | கிரியை அல்லது செய்கை | அட்சரம் |
|---|---|---|---|---|
| 1. | அனுத்ருதம் | U | ஒரு தட்டு | 1 |
| 2. | த்ருதம் | O | ஒரு தட்டு ஒரு வீச்சு | 2 |
| 3. | லகு | l | ஒரு தட்டும் விரல் எண்ணிக்கைகளும் | எண்ணிக்கை மாறுபடும் |

**சங்கீதக் கலையின் ஆரம்பம்**

இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட இசை சப்த ரிஷி களுக்கு உணர்த்தப்பட்டு அவர்கள் மூலம் இவ்வுலகில் பரவி யதாக நம்பப்படுகிறது. கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது வேதங்கள். இவற்றை ஓதுவதற்கு சாமகானம் பயன்பட்டது. இவை ரிஷபம், நிஷாதம், ஸட்ஜம் என்னும் ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டவை. பின்னர் இச்சுரங்கள் வளர்ச்சி யடைந்து ஸரிகமபதநி என்ற ஸப்த ஸ்வரங்களாகின. இதன் மூலம் இராகங்கள் உருவாகின.

கி.பி 3ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்தார். இதில் ஆச்சியர் குரவை என்ற

# நல்ல ஐயம்

ஏன் இந்த நெருப்புக்குச்சி எரிய மாட்டேங்குதுன்னு தெரியலியே! போன தடவை பத்த வைச்ச போது நன்றாக எரிந்ததே.



பகுதியில் ஆயர் மகளிர் பாடிய பாடலுக்கு முல்லைதீம்பாணி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதுவே பிற்காலத்தில் மோகன இராகமாக விளங்கியது.

பின்பு பரதர், மதங்கர் போன்றவர்களினால் வளர்க்கப் பட்ட இசை 7ம் நூற்றாண்டில் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரரின் தேவார இசையினால் வளர்ச்சி பெற்றுத் தமிழிசையாக விளங்கியது. அக்காலத்தில் 24 இராகங்கள் கையாளப்பட்டதாக அறிகின்றோம்.

தொடர்ந்து இசை, வாக்கேயகாரர்களினால் பூரண பொலிவுடன் வளர்க்கப்பட்டது. ஏராளமான இசை உருப் படிகள் ஆக்கப்பட்டன. பல இசை வித்துவான்கள் இசையை வளர்த்து வந்ததனால் இசை பசுமையுடன் இன்றும் விளங்கு கின்றது.

*இசைக்கலைமணி சங்கீத கலா வித்தகர்*
*திருமதி. சக்திதேவி சிவகுமார், ஆசிரியர், யாழ் இந்துமகளிர் கல்லூரி.*

# நேராகப் பொருள் கொண்டால்

சாப்பிடுபவர்

:- சர்வர் எனக்கு ஒரு ஸ்பூன் வேண்டும்!

சர்வர்

:- தாராளமாக எடுத்துச் செல்லுங்கள். ஆனால் முதலாளி கண்ணில் மட்டும் பட்டு விடாதீர்கள்.



# English Language Model Exam questions

1. **Complete the following words. First one is done for you.**

| | | |
|---|---|---|
| 1. ab<u>o</u><u>u</u><u>t</u> | 2. bot___ | 3. Fri___ |
| 4. nuis____ | 5. lit___ | 6. peo___ |
| 7. pl____ | 8. ja__ | 9. mu___ |
| 10. wo___ | 11. bro____ | |

(10 Marks)

2. **Match 'A' with 'B' and put the number in the brackets. first one is done for you.**

| A | | B |
|---|---|---|
| 1. Thaipongal | ( 4 ) | India |
| 2. Garbage | ( ) | holy mountain |
| 3. English | ( ) | Festival |
| 4. Indian | ( ) | Country |
| 5. Sripada | ( ) | Language |
| 6. China | ( ) | Litter |

(05 Marks)

3. **Fill in the blanks using suitable words given below. First one is done for you.**
   1. People must live <u>in</u> harmony.
   2. Lee kuan yew, the Prime minister__________ Singapore
   3. We hare learnt many things __________ London.
   4. There is a letter for Shankari __________ Kate
   5. People had put beautiful covers __________ the back of elephants.
   6. People are sent __________ jail for littering.

> to, from, about, in, on, of

(05 Marks)

4. **Complete the following paragraph. Use the words given below. First one is done for you.**

In the middle of the <u>hills</u> of Ceylon there towers a mountain. It stands more than seven thousand three hundred __________ above the level of the __________ Hindus,

Muslims, Buddhists and __________ revere this mountain as a __________ place. The shrine is only a tiled roof raised upon four __________.

| feet, hills, ocean, holy, christians, pillars. |
|---|

(10 Maks)

5. **Complete the following prepositional phrases using suitable words given below. First one is done.**
   1. The pilgrims of all Faiths.
   2. The __________ line of elephants.
   3. The sound of __________
   4. The __________ of the ocean.
   5. The __________ of the dancers.
   6. The middle of the __________

| hills, drums, level, faiths, dresses, long. |
|---|

(10 marks)

6. **Re arrange the following jumbled sentences in correct order.**
   1. for, your, Thank, letter, you
      Thank you for your letter.
   2. was, There, a letter, you, for

   3. are, People, fined, littering, for

   4. our, The, mother, earth, is

   5. precious, for, The air, is , all

   6. quench, Water, thirst, our

(10 Marks)

7. **Use the clauses given below to fill in the blanks first one is done for you.**
   1. When I feel thirsty, I will drink a glass of water
   2. When my birthday comes , __________
   3. When Principal comes, __________
   4. When we use polythene, __________

5. When the rain comes, ______________________

6. When we see elders, ______________________

I will give sweets to my Friends
We will give our seats
Environment will be polluted
I will drink a glass of water
Students will be silent
People will use umbrellas.

(10 Marks)

**8. Use suitable adjectives given below to complete the following sentences. First one is done for you.**

| highest, developed, pretty, holy, cleverest, more expensive. |
|---|

1. Sripada is a holy place.
2. Parrot is a _____ bird.
3. Nisha is the _____ girl in her class.
4. Pidurutalagala is the _____ mountain in Sri Lanka.
5. Singapore is a ______ country.
6. Biscuits are _____ than chocolates.

(10 Marks)

**9. Find the right question word and complete the question. First one is done for you.**

1. What is your Favourite game ? Cricket
2. _____ much is your bag? Rs 350.00.
3. _____ were you born? 5th May 1994.
4. _____ is your class teacher? Mrs.Shanker.
5. _____ did your sister study? at High School.
6. _____ were you late? Because I missed the bus.

| Who, When, What, How, Where, Why |
|---|

(05 Marks)

**10. Read the following passage and write answers to the given questions.**

Today games give an important place in this modern world. Games are a part of man's life. Games can be divided into types. They are indoor games and outdoor games.

Indoor games consist of games such as table tennis, chess etc. Cricket, Soccer, rugby comes under outdoor games. Games are the medicine for many diseases. Games also teach to accept defeat'. There is proverb "accept victory and welcome defeat".One of the main principles in games is to accept defeat.

1. What are the two types of games?
2. Name two indoor games?
3. What do outdoor games consist of?
4. What do games teach us?
5. What is the proverb mentioned here?


(10 Marks)

**11. Write on one of the heading.**

1. Festival you like most.
2. Environment.

(15 Marks)

***Mr.P.N.Shutharson, Dip.in.Eng, Spl.Trd(English)***




**வித்தியாசம் காண்க.**

இங்குள்ள 5 மீன்களில் ஒரே ஒரு மீன் மட்டும் மற்ற மீன்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. அந்த மீன் எது? எப்படி அது மற்றவற்றிலிருந்து மாறுபட்டுள்ளது.

அரசர் இராயர் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றார். எதிரில் வேடுவப் பெண் ஒருத்தி வந்தாள். நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள் அவள். தலையில் விறகுக் கட்டைச் சுமந்து வந்தாள்.

இந்த நிலையிலும் இப்படி உழைக்கிறாளே, இவளை பாராட்ட வேண்டும் என்று நினைத்தார் இராயர். திடீரென்று அவளுக்கு இடுப்பு வலி ஏற்பட்டது. விறகுக் கட்டை கீழே இறக்கி வைத்தாள். அருகில் இருந்த புதர் மறைவிற்குச் சென்றாள். சிறிது நேரத்தில் குழந்தை ஒன்றைப் பெற் றெடுத்தாள். குழந்தையுடன் வெளியே வந்தாள் அவள். விறகுக் கட்டைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாள் அவள். இடுப்பில் குழந்தை இருந்தது. எதுவுமே நடவாதது போலப் புறப்பட்டுச் சென்றாள். இதைப்பார்த்து வியப்படைந்து நின்றார் அரசர்.

குழந்தை பெறுவது இவ்வளவு எளிய செயலா? இதற்கா அரசி ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறாள்?

## எல்லாம் ஒன்றாகுமா?

எப்பொழுதும் இரண்டு மருத்துவர்கள் கூட இருக்கி றார்கள். வேளை தவறாமல் மருந்து உண்கிறாள். இதைக் காரணம் காட்டி நம்மை ஏமாற்றி இருக்கிறாள். கடினமான வேலை ஒன்றும் அவள் செய்வதுமில்லை என்று நினைத்தார்.

வேட்டைக்குச் செல்லாமல் நேராக அந்தப்புரம் வந்தார். காட்டில் நிகழ்ந்ததை அரசியிடம் சொன்னார். "குழந்தை பெறுவது எளிய செயல் என்று அறிந்து கொண்டேன். இனி என்னை ஏமாற்ற முயற்சி செய்ய வேண்டாம். மருந்து எதுவும் நீ உண்ண வேண்டாம். மருத்துவர்களையும் அனுப்பிவிடு" என்றார். இதைக் கேட்டுத் திகைத்தார் அரசி.

என்ன விளக்கம் சொன்னாலும் அரசர் ஏற்றுக்கொள்ள மாட்டாரே என்ன செய்வது என்று குழம்பினார்.



அப்பாஜியின் நினைவு அவருக்கு வந்தது. அந்தப்புரத்திற்கு அப்பாஜியை வரவழைத்தார். நடந்ததை எல்லாம் சொன்னார். "நான் மீண்டும் மருந்து உண்ண வேண்டும். மருத்துவர்கள் என்னைக் கவனிக்க வேண்டும். நீங்கள்தான் அரசருக்கு உண்மையை உணர்த்த வேண்டும். என்று வேண்டினார் அவர்.

"அரசியரே ! கவலை வேண்டாம். இரண்டு நாட்களில் மருத்துவர்கள் உங்களைக் கவனிப்பார்கள் என்றார் அப்பாஜி. அரசியாரிடம் விடை பெற்று தன்மாளிகை வந்தார். என்ன செய்வது? வேடுவப் பெண்ணின் நிலை வேறு, அரசியாரின் நிலை வேறு இதை எப்படி அரசருக்கு உணர்த்துவது? என்று சிந்தித்தார் அவர். அரண்மனைப் பூந்தோட்டத்தின் நினைவு அவருக்கு வந்தது. அங்கே பல வண்ணப் பூச் செடிகள் உள்ளன பல நாடுகளிலிருந்து அவை வரவழைக்கப்பட்டவை. அரசர் அந்தப் பூந்தோட்டத்தின் மேல் உயிரையே வைத்துள்ளார். அவருக்கு ஓய்வு கிடைத்தால் போதும் அங்கே போவார். கண்களைக் கவரும் பூக்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார். அவருக்கு உண்மையை உணர்த்த பூந்தோட்டத்தைப் பயன் படுத்துவோம் ! என்று நினைத்தார்.

பூந்தோட்டத்திற்குச் சென்றார் அவர். தோட்டக்காரர்களை அழைத்தார். "நீங்கள் யாரும் பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றக்கூடாது. என்கட்டளையை மீறினால் உங்கள் உடலில் உயிர் இருக்காது" என்று எச்சரித்தார்.

மறுநாள் மாலை அரசரிடம் வந்தார் அவர். அரசரே! அரண்மனைத் தோட்டத்திற்குச் செல்லலாம் வாருங்கள் என்று அழைத்தார். "பூந்தோட்டத்தைப் பார்ப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். வாரும் போகலாம்" என்றார் அரசர். இருவரும் ஒன்றாகப் பூந்தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். அங்கே பூச்செடிகள் வாடிக் கிடப்பதைக் கண்டார் இராயர். கோபத்தால் அவர் கண்கள் சிவந்தன. தோட்டக்காரர்களைப் பார்த்து இந்தப் பூச்செடிகள் என் உயிரினும் மேலானவை. இது உங்களுக்குத் தெரியாதா? ஏன் இவற்றிற்கு தண்ணீர் ஊற்றவில்லை? என் கட்டளையை மீறும் துணிவு வந்துவிட்டதா? உங்களுக்கு என்ன தண்டனை என்று கத்தினார்.


துளிர்கள் THULIRGAL

"தோட்டக்காரர்களோ நடுங்கியபடி நின்றார்கள். குறுக்கிட்ட அப்பாஜி "அரசே இவர்கள் மீது எந்தத் தவறும் இல்லை. நான் தான் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டாம் என்றேன்" என்றார். கோபம் அடங்காத அவர் "அப்பாஜி ! ஏன் அப்படிச் சொன்னீர்? தண்ணீர் ஊற்றா விட்டால் செடிகள் செத்துவிடுமே: இது உமக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"அரசே ! காட்டில் இவற்றைப் போன்று பூச் செடிகள் நிறைய உள்ளன. அவற்றிற்கு யாரும் தண்ணீர் ஊற்றுவது இல்லை. இவற்றைவிட அவை அழகாகப் பூத்துள்ளன. வள மாகக் காட்சி தருகின்றன. அதே போல இந்தச் செடிகளுக்கும் தண்ணீர் ஊற்ற வேண்டாம். காட்டுப் பூச் செடிகளைப் போல இவை நன்றாக வளரும் என்று நினைத்தேன். அதனால்தான் தோட்டக்காரர்களிடம் தண்ணீர் ஊற்ற வேண்டாம் என்றேன்.

"அப்பாஜி ! அவை காட்டுப் பூச்செடிகள். இவை அரண் மனைப் பூச்செடிகள். இரண்டும் ஒன்றாகுமா? தண்ணீர் ஊற்றா விட்டால் இவை வாடிவிடும். காட்டுச் செடிகள் வாடாது. இது உமக்குத் தெரியாதா? உம்மை அறிவு உடையவர் என்று நினைத் தேன். இப்படி நடந்து கொண்டீரே"


"அரசே ! வேடுவப் பெண்ணும் அரசியரும் ஒன்றாவார் களா? எதையும் தாங்கும் வலிமை உடையவள் வேடுவப் பெண். மிக மென்மையானவர் அரசியார். இருவரையும் ஒன்றாகக் கருதினீர்களே. அரசியாருக்கு மருந்தும், மருத்துவமும் வேண் டாம் என்றீர்களே. இதுசரியா? என்று பதில் கேள்வி கேட்டார் அப்பாஜி. தன்தவறை உணர்ந்தார் அவர்.

"அப்பாஜி எல்லோரும் ஒன்றாக முடியாது. காட்டுச் செடி வேறு, தோட்டச் செடி வேறு. சூழ்நிலை வலிமையைத் தரும். வலிமையை இழக்கவும் வைக்கும். இந்த உண்மையை உம்மால் புரிந்து கொண்டேன். மருத்துவர்கள் வழமைபோல் அரசியரை கவனித்துக் கொள்வார்கள் என்றார்.

தன் திட்டம் வெற்றி பெற்றது என்று மகிழ்ந்தார் அப்பாஜி. நடந்ததை அறிந்தார் அரசி. அப்பாஜியை அழைத்து அவருக்கு நன்றி தெரிவித்தார்.

# நடன முத்திரைகள்

## கஜதந்த ஹஸ்தம்



**செய்முறை:**


நாக பந்த கைகள் சற்றே நீண்டும், விரல் நுனிகள் எதிர்நோக்கி இருக்குமாறும் வைப்பதாகும். ஸர்ப்பசீர்ஷ கைகள் ஸ்வஸ்திக நிலையில் இல்லாமல், ஒன்றற்கொன்று நேர் எதிராக வைத்துச் செய்யப்படுதலும் கஜதந்த ஹஸ்தமாகும்.

**விநியோகம்:**

உணவு உண்டவுடன், தாகத்திற்கு நீர் எடுத்து அருந்துதல், வேண்டாவெறுப்பாக அல்லது நடிப்பதைப் போன்று தழுவுதல்.

பூர்ணகும்ப மரியாதையில் கலசம் ஏந்தி வருதல். தலையில் விறகுச் சுமை சுமத்தல். குழந்தையை இடுப்பில் கை வைத்துத் தூக்குதல்.

## அவஹித்த ஹஸ்தம்




**செய்முறை:**

இரு அலபத்ம கைகள் எதிர் எதிராக மார்பிற்கு அருகே வைத்து அசைத்தல். இதனைச் சுகதுண்ட ஹஸ்தமாகவும் சில நூல்கள் தெரிவிக்கின்றன.

**விநியோகம்:**

தனது அழகைக் காண்பிக்கின்ற மங்கையையும், சுத்த நிருத்தத்தில் நாட்டிய அசைவுகளையும் காட்ட இது உபயோகப் படுகிறது.

# கலச ஹஸ்தம்



**செய்முறை:**

இரு கைகளிலும் அர்த்த சந்திரத்தினை நெருக்கமாகப் பிடித்துச் சுண்டுவிரல்கள் ஒன்றை ஒன்று தொடுமாறு பிடித்தல். புஷ்பபுட ஹஸ்தத்தை விறைப்பாக நீட்டிப் பிடித்தல் என்றும் கொள்ளலாம்.

**விநியோகம்:**

விநோதமான பொருள்களைப் பிறருக்குக் காண்பித்தல், புத்தகம் படித்தல், தெய்வீகப் பொருள்களைக் கண்களில் ஒற்றிக்கொள்ளுதல்,

தாரை வார்த்தல், துன்பத்தில் முகத்தை மூடி அழுதல், தலையில் வெப்பத்திற்காகக் கையை வைத்துக்கொள்ளுதல் போன்றவற்றைக் காட்ட உபயோகப்படும்.

# நிடத ஹஸ்தம்

**செய்முறை:**

இடக்கையில் முகுளத்தினைப் பிடித்து வலக்கையில் கபிதத்தினால் முகுளக் கையைச் சுற்றுவதை நிடத ஹஸ்தம் என்பர்.



**விநியோகம்:**

பெரும் தேவைகள், நூற்கண்டு சுற்றுதல், பறவைகள் உணவு தேடல் போன்றவற்றிற்கு இந்த ஹஸ்தத்தை விநியோகிக்கலாம்.

## பக்ஷவஞ்ஜித ஹஸ்தம்



**செய்முறை:**

அர்த்தசந்திரக் கைகள் இரண்டையும் இடுப்பின்மீது வைத்தல். சிலர், உள்ளங்கை இடுப்பின்மீது படுமாறும், மணிக்கட்டு இடுப்பின்மீது அமர்ந்திருக்குமாறும் வைத்தல் வேண்டும் என வேறுவிதமாகக் கூறுவார்கள்.

**விநியோகம்:**

இடுப்பில் கட்டுகின்ற கயிறு(அரைஞாண்), வெற்றி விருதுகள், நாட்டிய ஆரம்பம், இடுப்புவலி, பறவையின் இறகுகள், ஒட்டியாணம் அணிதல், சேலையைத் திருத்துதல், உடுப்பி கண்ணன், யௌவன வாலிபர்கள், பாண்டுரங்கன் போன்றவற்றைச் செய்துகாட்ட பக்ஷவஞ்ஜித முத்திரை பயன்படும்.

## உத்தான வஞ்ஜிதம்

**செய்முறை:**

இரு திரிபாகக் கைகளைத் தோளுக்கு நேராகப் பிடிக்க வேண்டும். இது திருமாலின் அவதாரத்திற்கு மட்டும் உப யோகமாகும். இதே நிலையில் பதாகக் கைகளாக வைக்கப் பட்டால் பயம், அதிர்ச்சி, மயக்கம் போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். அப்போது அந்த ஸம்யுத முத்திரை பதாக உத்தான வஞ்ஜிதம் என்று அழைக்கப்படும்.

# உபசார ஹஸ்தம்

**செய்முறை:**


சந்த்ர கலா ஹஸ்தத்தின்மீது மற்றொரு சந்த்ரகலா ஹஸ் தத்தை, இரு கட்டைவிரல் களும், ஆட்காட்டி விரல்களும் ஒன்றை ஒன்று தொட்டவாறு இருத்தல் வேண்டும்.

**விநியோகம்:**

ஒழுக்கமுள்ள ஆண்மகன், மரியாதை மிகுந்த பெரியவர்கள் அல்லது மரியாதைக்குரிய பெரியவர்கள், திருநீறு வைக்கப்படும் கிண்ணம், இந்துக்கள் அல்லாத சில மதத்தினர் செய்து கொள்ளும் வணக்கங்கள்.

---

**திருமதி.ஸ்ரீமோகனா பாலசுப்பிரமணியம்,**
**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,யாழ்ப்பாணம்.**




நான்கு பொத்தான்களில், எதை அழுத்தினால் விளக்கு எரியும்?

பெரிய படை சூழ தசரதன் அயோத்தி திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் அவர்களைப் பரசுராமர் தடுத்து நிறுத்தினார்.

இருபத்தொரு தலைமுறைகளாக அரச குலத்தின ரையே அழித்தவர் அவர். பேராற்றல் வாய்ந்தவர். அவர் முகத்தில் கோபக்கனல் வீசியது.

எல்லோரும் நடுங்கும்படி "இராமா" என்று இடி போன்று முழங்கினார்.

இராமன் அவர் எதிரில் வந்தான். அவரைப் பார்த்தான்.

ஏன் எங்களைத் தடுக்கிறீர்? உமக்கு என்ன வேண்டும் என்பது போல அவன் பார்வை இருந்தது.

பழமையான சிவ வில்லை உடைத்து விட்டாய். அதனால் நீ மாவீரனாக மாட்டாய். என் கையில் உள்ளது. திருமாலின் வில். இதை வளைத்துக் காட்டு பார்ப்போம் என்று கோபத்துடன் தன் வில்லை நீட்டினார் பரசுராமர்.

## இராமாயணம்

இராமனுக்கு என்ன நிகழப் போகிறதோ? பரசுராமரின் கோபத்தை யாராலும் தணிக்க முடியாதே. என்ன செய்வது என்று தசரதனும் மற்றவர்களும் கலங்கினார்கள்.

எந்தத் தயக்கமும் இன்றி அந்த வில்லை வாங்கினான் இராமன். அதில் அம்பு பூட்டினான். எளிதாக வளைத்தான்.

எதன் மீது இந்த அம்பை எய்ய வேண்டும்? என்று அமைதியாகக் கேட்டான்.

இதை எதிர்பாராத பரசுராமர் திகைத்தார். அவர் ஆணவம் அழிந்தது.

என் வலிமையையும் தவத்தையும் எடுத்துக் கொள் என்றார் அவர். அங்கிருந்து சென்றார்.

துளிர்கள் THULIRGAL

எல்லோரும் அயோத்தி மாநகர் வந்தனர். மக்கள் அவர்களைக் கோலாகலமாக வரவேற்றனர்.

அங்கே இராமனும் சீதையும் உள்ளம் ஒன்றி வாழ்ந்தார்கள். இல்லறத்தை நல்லறமாக நடத்தினார்கள். ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள்.

கணவன் என்றால் இராமனைப் போல இருக்க வேண்டும். மனைவி என்றால் சீதையைப் போல இருக்க வேண்டும் வாழ்ந்தால் இவர்களைப் போல வாழ வேண்டும் என்று எல்லோரும் புகழ்ந்தார்கள்.

பாட்டனாரைப் பார்ப்பதற்காகப் பரதனும் சத்ருக்கனும் கேகய நாடு சென்றனர். அங்கேயே தங்கி விட்டனர்.

தன் முதுமையை எண்ணிக் கவலை கொண்டார் தசரதன்.

அரியணையில் வீற்றிருந்த அவர் அவையினரைப் பார்த்தார். "இனியும் என்னால் அரசாட்சியைச் சுமக்க இயலாது. இராமனுக்கு முடி சூட்ட எண்ணுகிறேன். உங்கள் கருத்து களைத் தயங்காமல் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"அரசே! அரியணைக்கு மிகவும் பொருத்தம்ஆனவர் இராமனே. நற்பண்புகள் அனைத்தும் உடையவர். இந்தச் செய்தியை அறிந்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். என்று எல்லோரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

அடுத்த நாளே முடி சூட்டு விழா என்று முடிவு செய்யப் பட்டது.

இதை அறிந்த மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தார்கள். ஆரவாரம் செய்தபடி எங்கும் கொடிகளும் தோரணங்களும் அமைத்தார்கள்.

முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி இது. கைகேயியின் பணிப் பெண் மந்தரை. கூன் விழுந்த அவளை எல்லோரும் கூனி என்று அழைத்தார்கள். அரண்மனை வீதியில் வந்து கொண்டிருந்தாள்.

சிறுவனாக இருந்த இராமன் அவனைப் பார்த்தான்.

அவள் கூன் நிமிர வேண்டும் என்று நினைத்தான். விளையாட்டாக அவள் முதுகில் அம்பால் அடித்தான்.

என்னையே அம்பால் அடிக்கிறாயா? உன்னைப் பழி வாங்குவேன். என்று வஞ்சகம் கொண்டாள் அவள்.

வீதி வழியாக வந்து கொண்டிருந்தாள் கூனி. நகரம் முழுமையும் அலங்காரம் செய்யப்படுவதைக் கண்டாள். என்ன செய்தி என்று விசாரித்தாள். இராமனுக்கு மணிமுடி சூட்டப் போகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டாள்.

பதைபதைத்த அவள் எப்படியும் இதைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தாள்.

கையேயிடம் ஓடி வந்த அவள் "அம்மா! ஆபத்து வந்து விட்டது. இராமனுக்கு நாளை முடி சூடப் போகிறார்கள்" என்று அலறினாள்.

என் மகன் இராமனுக்கு முடி சூடப் போகிறார்களா? மகிழ்ச்சியான செய்திதானே. இதற்கு ஏன் அலறுகிறாய்? என்று பூரிப்புடன் கேட்டாள் கையேயி.

உங்கள் மகன் பரதன் இங்கு இல்லை. உடனே இராமனுக்கு முடி சூட வேண்டிய கட்டாயம் என்ன? அவன் அரசனானால் உங்கள் நிலை என்ன ஆகும்? உங்களுக்கு என்னென்ன கெடுதிகள் வர உள்ளன? எதையாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? என்று கோபத்துடன் கேட்டாள் கூனி.

நீ என்ன பேசுகிறாய்? என் நிலை என்ன ஆகும்?

இராமன் அரசனானால் எல்லா அதிகாரமும் கோசலைக்குப் போய்விடும். நீங்களும் பரதனும் அவள் கையை எதிர்பார்த்தே வாழ வேண்டும். உங்கள் எதிர்காலத்தையும் மகனின் நலத்தையும் நினைத்துப் பாருங்கள்" என்றாள் கூனி.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே. கூனியின் வஞ்சப் பேச்சால் கைகேயியின் உள்ளமும் மாறுபட்டது.


கூனியே ! நீ சொல்வது எனக்கு உண்மையாகப்படுகிறது. நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் கைகேயி.

**தொடரும்.....**

# சிறுவர்களது உரிமைகளும் கடமைகளும்



சிறந்த கல்வியைபை பெறுவது
சிறுவர்களது உரிமையாகும்



கல்விகற்றல், ஆசிரியர்களை மதித்தல்
சிறுவர்களது கடமையாகும்.



நண்பர்களுடன் பழகுவது
சிறுவர்களது உரிமையாகும்



சிறுவர்கள் புத்தியுடன் நண்பர்களைத்
தேர்ந்தெடுப்பது அவர்களது கடமையாகும்



போதைப்பொருள், புகைத்தல்
ஆகிவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவது
சிறுவர்களது உரிமையாகும்



ஏனையோரின் ஏளனத்திற்கும்
வற்புறுத்தலுக்கும் இணங்கி ஈடுபடாமல்
இருப்பது சிறுவர்களுடைய கடமையாகும்



தீயசிந்தனை உள்ளவர்களின் அறிவுறுத்த லிலிருந்து பாதுகாப்புப் பெறுவது சிறுவர்களின் உரிமையாகும்.



பெற்றோருக்கு உதவுவது சிறுவர்களது கடமையாகும்



தங்களை பராமரித்துக் கொள்வது சிறுவர்களது கடமையாகும்



உரிய வைத்திய சேவைகளைப் பெறுவது சிறுவர்களது உரிமையாகும்



கல்விகற்றல் மற்றும் ஏனைய வேலைகளுக்கு நேரத்தை ஒதுக்குதல் சிறுவர்களது கடமையாகும்



ஓய்வு மற்றும் விளையாட்டு சிறுவர்களது உரிமையாகும்


## நன்றி

ஐ.நா.சிறுவர் நிதியம், ஐ.நா.அபிவிருத்தித்திட்டம்,
சிறுவர் பாதுகாப்பு நிதியம்-இலங்கை
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, வெளியீடுகள்.

# பொது அறிவு

01) இலங்கைத்தீவின் வரலாற்றுத் தொடர்கள் என்ற நூலை எழுதியவர் - றொபோட் நொக்ஸ்.

02) கண்டியில் உள்ள தலதாமாளிகையைக் கட்டியவர் 1ஆம் விமலதர்ம சூரியன்.

03) சர்வதேச ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 6ஆம் திகதியாகும்.

04) மகாபோதி சங்கத்தின் தாபகர் அநாகரிக தர்மபால

05) 1955ல் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் இலங்கை உறுப்புரிமை பெற்றது.

06) பண்டுகாபயன் - அநுராதபுரத்தை இராசதானியாக்கியவர்.

07) காசியப்பன் - 'சிகிரியா குகை ஓவியங்களைத்" தீட்டியவர்.

08) மு.நவரத்தினசாமி - பாக்குநீரிணையை முதன் முதல் நீந்திக்கடந்தவர்.

09) மகிந்ததேரர் - இலங்கை பௌத்த மதத்தாபகர்.

10) எதிரிவீரி சரத்சந்திர - சிங்கள மொழி வளர்ச்சிக்கு பங்காற்றியவர்.

11) யப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோ

12) முதன் முதலில் 1962இல் வர்த்தகச் செய்மதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

13) பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க. 16உம் இவைகளாகும். புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்வாழ்வு, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, ஆயுட்காலம்.

14) இருதயம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவைகள் துடிக்கின்றது.

15) இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்று கூறியவர் சிறிமாவோ பண்டாரநாயகா.

16) அமெரிக்க நாட்டு இராணுவத்தின் தலைமைப்பீடம் பென்ரகன் எனபப்டும்.

17) உலக தொழிலாளர் தினம் (மே தினம்) 01.05.1890 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டாடப்பட்டு வருகிறது.

18) 2000 ஒலும்பிக்கில் இலங்கைப் பெண்மணி சுசந்திகா வெண்கலப்பதக்கம் பெற்றார்.

19) பிரிட்டிஸ் பிரதமர் -டொனிபிளேயர்.

20) பெண் குத்துச்சண்டையாளர்கள் - குகமட் அலி லைலா, ஜெக்கி பிறேசியர்.

21) "இஞ்சியைக் கொடுத்து மிளகாய் பெற்றுக் கொண்டது போல்" இதில் இராஜசிங்கனும் ஒல்லாந்தரும் தொடர்புறுகின்றனர்.

22) விண்வெளிப் பயணத்தை முதன் முதல் மேற்கொண்டவர்கள் யூரிககாரின், வலன்ரைனா, தெஸ்கோவா (ரஷ்யா)

23) நாடுகளும் பாராளுமன்றமும்

| | |
|---|---|
| அமெரிக்கா ஜாதிபதி மாளிகை | வெள்ளைமாளிகை |
| ரஷ்யா ஜனாதிபதி மாளிகை | கிரம்லின் |
| இந்திய ஜனாதிபதி மாளிகை | ராஷ்ரபதிபவான் |
| இந்திய பாராளுமன்றம் | லோக்சபை |
| இலங்கை பாராளுமன்றம் | பாராளுமன்றம் |
| ஐக்கிய அமெரிக்க பாராளுமன்றம் | காங்கிரஸ் |
| ரஷ்ய பாராளுமன்றம் | சுபரீம் சோவியத் |
| பிரித்தானிய பாராளுமன்றம் | பாராளுமன்றம் |
| பிரான்ஸ் பாராளுமன்றம் | தேசியசபை |
| ஜேர்மன் பாராளுமன்றம் | ரிச்ஸ்ரேஜ் |

24) சின்னங்களும் நாடுகளும்

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | கங்காரு |
| பிரித்தானியா | ரோஜாமலர் |
| தாய்லாந்து | வெள்ளையானை |
| கனடா | வெள்ளை மலர் |
| பிரான்ஸ் | அல்லி மலர் |
| வடஅமெரிக்கா | துருவக்கலைமான் |
| ஈரான் | ஒட்டகம் |
| தென்ஆபிரிக்கா | தீக்கோழி |
| அரேபியா | ஒட்டகம் |
| தென் அமெரிக்கா | குரங்கு |

25) சர்வதேச தினங்கள் கொண்டாடும் காலம்

| | |
|---|---|
| உலக சுற்றாடல் தினம் | யூலை - 5 |
| ஆசிரியர் தினம் | ஒக்டோபர் - 6 |
| சிறுவர் தினம் | ஒக்டோபர் - 1 |
| மனித உரிமைகள் தினம் | டிசெம்பர் - 10 |
| சிக்கனம் | ஒக்டோபர் 30 |


| | |
|---|---|
| வலது குறைந்தோர் | மார்ச்-20 |
| மகளிர் | மார்ச்-08 |
| பத்திரிகையாளர் | செப்ரெ-08 |
| எயிட்ஸ் | டிசம்பர் -01 |
| மரநடுகை | செப்ரெ-17 |

26. பாலின் ஒப்பு அடர்த்தியைக் காண உதவும் கருவி பாலளவி (லக்ரோமீற்றர்)
27. சந்திரத் தரையில் முதல் காலடி வைத்தவர் நீல ஆம்ஸ்ரோங்
28. விமானத் தாய் பெயர்கள்

| | |
|---|---|
| ருஷ்யா | ஏரோபிளாட் |
| இலங்கை | ஏர்சிலோன் |
| இந்தியா | ஏர் இந்தியா |
| பிரித்தானியா | பிரிட்டிஸ் ஏர்வேஸ் |
| யப்பான் | யப்பான் ஓர்லைன்ஸ் லிமிட்டெட் |
| அவுஸ்ரேலியா | குவான்டாஸ் எம்பயர் ஏர்வேல் |
| சுவிஸ்லாந்து | சுவிஸ் ஏர் |
| இத்தாலி | அலிதாலியா |

29. இயற்கைத் தத்து வத்தின் கணிதக் கோட்பாடுகளை என்ற நூலை வெளியிட்டவர் சேர்.ஐசாக் நியூட்டன்
30. கரப்பந்தாட்ட தைதானம் 30 அடி நீளம் 10அடி அகலம் கொண்டது.
31. முதல் மெரிக்க ஜனாதிபதி ஜோஜ் வாசிங்டன்
32. அதிக விளைச்சலைத் தரும் நெல்லினம் - பிஜி
33. கூட்டுறவுக்கல்லூரி அமைந்த இடம் - லால்கொல்ல
34. வெளிநாடுகளுக்குச் செய்திகளை அனுப்புவதற்காகப் பயன்படும் நவீன தொடர்பாடல் ஊடகம்-தொலையச் சிடல்
35. 1963 இல் ஆரம்பிக்கப்பட்டு 10மொழிகளில் மாதம் 3 கோடிவரை வெளிட்டப்படும் சஞ்சிகை றீடேஸ்டயஸ்ற
36. தாதிச் சேவையின் தாய் - புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார்
37. "எயிட்ஸ்" குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பிரிட்டிங் நடிகை" எம்மா சொம்சன்" செயற்பட்டு வருகிறார்.
38. 1985 இல் சார்க் நாடுகளில் உதயம் ஆரம்பமானது
39. பொது நலவாய அமைப்பினின்றும் வெளியேறிய நாடுகள் பாமா, தென் அயர்லாந்து

# வழியைக் கண்டுபிடியுங்கள்



ஓர் ஊரில் முத்து என்பவன் இருந்தான். அவனுக்குச் சொந்தமாக நிறைய மாடுகள் இருந்தன. பக்கத்து வீட்டில் மாணிக்கம் என்பவன் இருந்தான். அவனிடம் ஐந்து மாடுகளே இருந்தன. முத்து அடிக்கடி வெளியூர் செல்வான். அவன் மாடுகளை எல்லாம் மாணிக்கமே பார்த்துக் கொள்வான். மாணிக்கத்திடம் வந்த முத்து "நான் வெளியூர் செல்கிறேன். திரும்பிவர பல நாட்கள் ஆகும். என்மாடுகளை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றான்.

"கவலைப்படாமல் போய்வா ; நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் மாணிக்கம். முத்துவும் புறப்பட்டுச் சென்றான்.

# கன்றுகளை மாற்றினான்

ஏமாற்றுக்காரனான மாணிக்கம் வாய்ப்பைப் பயன்படுத்த நினைத்தான். முத்துவின் மந்தையில் இருந்து மூன்று கடாரிக் கன்றுகளைப் பிரித்தான்.அவற்றை தன் மாடுகளுடன் சேர்த் தான். மூன்றை முத்துவின் மந்தையில் சேர்த்தான். சில நாட்கள் சென்று முத்து ஊர் திரும்பினான். கன்றுக்குட்டிகள் மாற்றப் பட்டதை அவன் அறியவில்லை. முத்துவின் மாடுகளை திடீ ரென்று நோய் தாக்கியது. எல்லா மாடுகளும் இறந்து விட்டன. இதனால் உள்ளம் உடைந்தான் அவன். அந்த ஊரை விட்டு எங்கோ சென்று விட்டான். ஆண்டுகள் சில சென்றன. மாணிக் கத்தின் மாடுகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. அவன் மாற்றிய கன்றுகளும் வளர்ந்து பசுக்கள் ஆயின. அவை பால் தந்து கொண்டிருந்தன.

முத்து அந்த ஊருக்கு வந்தான். அவன் நிலையைக் கண்டு இரக்கப்பட்டான் மாணிக்கம். தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

"குடிப்பதற்கு பால் வேண்டும்" என்றான் முத்து. பால் கொண்டு வந்து கொடுத்தான் மாணிக்கம். அந்தப் பாலைக் குடித்தான் முத்து. அதன் சுவை அவனுக்குப் பழக்கப்பட்டதாக இருந்தது. தன் பசுவின் பால் என்பது அவனுக்குத் தெரிந்தது. "ஆ! இந்தப் பாலை நான் முன்னரே சுவைத்துள்ளேன். என் நாக்கு என்னை ஏமாற்றாது. என் மாடு ஈன்ற கன்று தான் இந்த மாடாக உள்ளது. அதன் பால்தான் இது"

நீ என் கன்றுகளை மாற்றி இருக்கிறாய். என் மாடுகளைக் கொடு என்று கத்தினான்.

திகைத்த மாணிக்கம் "என்ன பேச்சுப் பேசுகிறாய் மாடுகளை இழந்ததால் உனக்குப் பித்துப் பிடித்து விட்டதா? என் பசுவின் பாலைத்தான் உனக்குத் தந்தேன்." என்றான். "நீ என்னை ஏமாற்றி இருக்கிறாய். இந்தப் பால் என்மாட்டின் பால்தான். என் மாடுகளைக் கொடு என்று கூச்சல் போட்டான் முத்து. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கே கூடிவிட் டார்கள். மாடுகளை இழந்ததில் இவன் அறிவு குழம்பி விட்டது. அதனால் இப்படிக் கத்துகிறான் என்றான் மாணிக்கம். அங்கு வந்தவர்கள் கலைந்து சென்றார்கள். தன் பேச்சு எடுபடாது என்பதை உணர்ந்தான் முத்து. நீதிமன்றத்துக்குச் சென்று நீதிபதி மரியாதை ராமனை வணங்கினான். நடந்ததை எல்லாம் சொன்னான்.

"நீங்கள் நீதி வழங்க வேண்டும் என்று வேண்டினான். மாணிக்கத்தை நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் அவர். என்ன நடந்தது என்று விசாரித்தார்.

"நீதிபதி அவர்களே! மாடுகளை இழந்த சோகத்தில் இவனுக்குப் பித்துப் பிடித்து விட்டது. எங்கோ சென்று சில ஆண்டுகளுக்குப் பின் திரும்பினான். இவன் மீது இரக்கப்பட்டு என் வீட்டில் தங்கவைத்தேன். இவனுக்குப் பால் கொடுத்தேன். அதைக் குடித்தான். இந்த மாடு என்மாடு என்று பிதற்றத் தொடங்கினான். இங்கு வந்து வழக்குத் தொடுத்துள்ளான். என்மாடு ஈன்ற கன்றுதான் அந்தப் பசு அதை நான் பல



ஆண்டுகளாக வளர்த்து வருகிறேன்" என்றான் மாணிக்கம்.

குறுக்கிட்ட முத்து "என் பசுவின் பால் சுவை எனக்குத் தெரியாதா? அது என் பசுதான். கன்றாக இருக்கும் போதே இவன் திருடி இருக்கிறான்." என்றான். என்ன செய்வது என்று சிந்தித்தார் நீதிபதி. முத்துவையும் மாணிக்கத்தையும் பார்த்தார் நீதிபதி மரியாதை இராமன். உங்கள் வழக்கு மிகவும் சிக்கலாக உள்ளது. தீர ஆராய்ந்தே தீர்ப்பு வழங்க வேண்டும். ஒருமாதம் கழித்து வாருங்கள் என்றார். அவர்கள் இருவரும் அங்கிருந்து சென்றார்கள். ஏவலர்களை அழைத்தார் நீதிபதி.

"அரண்மனை தோட்டத்தில் மூன்று பாத்திகளை அமையுங்கள். முதல் பாத்தியில் மாட்டு எரு போடுங்கள். இரண்டாம் பாத்தியில் ஆட்டு எரு போடுங்கள். மூன்றாம் பாத்தியில் குப்பை எரு போடுங்கள். மூன்று பாத்திகளிலும் கீரையை விதையுங்கள். ஒரு மாதத்திற்குள் கீரை நன்கு வளர்ந்து விடும். நான் சொல்லும் நாள் அன்று கீரையைப் பறியுங்கள். மூன்று பாத்தி கீரையையும் தனித்தனியே கொண்டு வாருங்கள்" என்றார். குறிப்பிட்ட நாள் வந்தது. மூன்று பாத்திகளிலும் விளைந்த கீரைகளையும் ஏவலர்கள் கொண்டு வந்தார்கள். சமையல்காரனை அழைத்தார் நீதிபதி. இந்த மூன்று கீரைகளையும் ஒன்றாகச் சமைக்க வேண்டும். இதில் எருமைத் தயிர், பாலின் தயிர், ஆட்டின் தயிர் மூன்றையும் ஊற்ற வேண்டும். சுவையாகச் சமைக்க வேண்டும்" என்றார். அவனும் அப்படியே செய்தான். முத்துவையும், மாணிக்கத்தையும் தன் வீட்டிற்கு வரவழைத்தார் நீதிபதி. என்னுடன் சேர்ந்து உண்ணுங்கள் என்றார். சமையல்காரன் அவர்கள் மூவருக்கும் இலை போட்டான். அதில் சோறு வைத்தான். தளதள வென்று கீரையை ஊற்றினான். மூவரும் அந்த உணவைச் சுவைத்து உண்டார்கள்.

"சாப்பாடு எப்படி இருந்தது?" என்று கேட்டார் நீதிபதி. "அருமையான சாப்பாடு சுவையாக இருந்தது. நன்றாக உண்டேன். என்றான் மாணிக்கம். ஆ! என்ன சுவை ! மாட்டு எரு,



துளிர்கள்
THULIRGAL

ஆட்டு எரு, குப்பை எருவால் விளைந்த அருமையான கீரை. அதில் எருமைத் தயிர், பசுவின் தயிர், ஆட்டுத் தயிர் மூன்றும் கலந்துள்ளது. திறமையான சமையல்காரனின் கைவண்ணமும் சேர்ந்துள்ளது. சுவையைக் கேட்கவா வேண்டும்? வயிரார உண்டேன்." என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் முத்து.

ஆ! இவனுக்கு எப்படிப்பட்ட சுவை உணர்வு உள்ளது. எதையும் பார்க்காமல் உள்ளதை உள்ளபடி சொல்கிறானே! என்று நினைத்தார் நீதிபதி.

மாடு தன்னுடையது என்று இவன் சொன்னான். அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். கன்றுக் குட்டிகளை மாணிக்கம் மாற்றி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். மாணிக்கத்தைப் பார்த்து அவர், நீரும் கீரை உணவைச் சாப்பிட்டீர் இவரும் கீரை உணவைச் சாப்பிட்டார். இவர் சொன்னது போலவே இந்த உணவு சமைக்கப்பட்டுள்ளது. பாலைக் குடித்த இவர் சொன்னது உண்மையாகத்தான் இருக்கும். கன்றுக்குட்டிகளை நீர் மாற்றி இருக்கிறீர். உண்மையை ஒப்புக் கொண்டால் தண்டனையிலிருந்து தப்பலாம். உண்மையை வரவழைக்கும் வழி எனக்குத் தெரியும். பிறகு கடுமையான தண்டணைக்கு உள்ளாவீர் என்று மிரட்டினார். உண்மை வெளிப்பட்டு விட்டதே என்று நடுங்கினான் மாணிக்கம். "ஐயா! என்னை மன்னியுங்கள் இவனின் மூன்று காடரிக் கன்றுகளை என்மாடுகளுடன் சேர்த்தேன். அதற்கு பதில் காளைக் கன்றுகள் மூன்றை அங்கே விட்டேன்.

இவனின் கன்றுகள் இப்போ பசுமாடுகளாக உள்ளன. பால் தருகின்றன. என்றான்.

"அந்த மூன்று மாடுகளையும் முத்துவிடம் கொடுத்து விடு" என்று தீர்ப்பு வழங்கினார் அவர். இருவரும் அவரை வணங்கிவிட்டுப் புறப்பட்டார்கள்.

இவ்வாறு நீதிபதி மரியாதை ராமன் தன்னிடம் வந்த வழக்குகளை ஆராய்ந்தார். நல்லதீர்ப்பு வழங்கினார். அவர் புகழ் எங்கும் பரவியது. எல்லோரும் அவரைப் போற்றினார்கள்.

# நெருப்புக் காய்ச்சல்

யாழ் குடா நாட்டில் சிகிச்சை பெறும் நோயாளர்களில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் (தைபோயிட்) எனப்படும் நோயினால் பீடிக்கப்பட்டோருமே மிகப் பெருந் தொகையினராவர். மலேரியா போன்றே நெருப்புக் காய்ச்சலும் குடா நாட்டில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. நெருப்புக் காய்ச்சல் முற்றிலும் தவிர்க்கக் கூடிய ஒரு நோயாகும். எனினும் இந்நோய் பற்றிய பூரண அறிவின்மையினால் வருடாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் ஒரு முறை நோய்வாய்ப்பட்டு குணமடைந்து சென்றவர்கள் கூட அவதானமின்றி இருந்து மீண்டும் மீண்டும் இதே நோயினால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதி பெறுவதையும் காணக்கூடியதாக உள்ளது. Salmo mella Typhi, Salmonella Paratyphi எனும் இரு வகை பக்ரீரியா நுண்கிருமிகளால் நெருப்புக்காய்ச்சல் தோற்றுவிக்கப்படும். மனிதனில் மட்டும் இந்நோய் ஏற்படும். நீர்நிலை வசதிகள் குறைந்த இடங்களிலும் பருவமழைக் காலங்களிலும் நோய்க் கிருமித் தொற்று அதிகரிக்கிறது. நோயாளியின் மலம் சலத்திலும் நோயிலிருந்து குணமான பின்பும் சில காலத்திற்கு நோய்க் கிருமியை மலத்தில் கொண்டிருப்போரான நோய்க் காவிகளானவர்களின் மலசலத்திலும் பற்றீரியா காணப்படும். இது பின்வரும் வழிகளில் தொற்றிக் கொள்ளும்.

நோயாளியின் மலத்தில் உட்கார்ந்த இலையான்கள் பின்னர் கடைகளிலும் வீடுகளிலும் திறந்து வைத்த உணவுப் பதார்த்தங்கள் மீது உட்கார்ந்து தமது கால்கள் மயிர்கள் என்பனவற்றைச் சுத்திகரிக்கும் போது கிருமிகள் உணவை அடைந்து விடும். பின்னர் அவ்வுணவை மனிதர் உட்கொள்ளும் போது சுகதேகியின் குடலை அடைந்து நோய் தொற்றலாம்.

நோயாளி அல்லது நோய் காவி மலங்கழித்த பின் கைகளை சரியாகக் கழுவாமல் சுகதேகியான மற்றவர்கள் உண்ணும் உணவுகளைக் கையாளும் போது மல கூடங்களில் அல்லாமல் வெளியில் மலம் கழித்தல் மூலமாகவும் தொற்றிக் கொள்கின்றன.

நோயாளியின் மலத்திலுள்ள பற்றீரியாக்கள் மழைக் காலங்களில் மழை நீருடன் அடித்துச் செல்லப்பட்டு குடி நீர் நிலைகளை அசுத்தமாக்கலாம்.

நோயாளி மண்ணில் மலம் கழித்தால் அது மண்ணோடு மண்ணாகக் காணப்பட்டு பின் அந்த மண்ணில் குழந்தைகள் அளைந்து விளையாடினால் விளையாடிய பின் கைகளை சரியாகக் கழுவாமல் அந்தக் கையுடன் சாப்பிடும் போது பற்றீரியா குடலை அடையும்.

மண்ணில் கழிக்கப்பட்ட மலம் மூலம் இலைக் கறிவகைப் பயிர்களில் மலத்தோடு மலமாகக் கிருமி ஒட்டி இருக்கும். இந்த இலைக்கறி சரியாகக் கழுவப்படாமல் பச்சையாக உணவாக உட் கொள்ளப்படினும் நோய் தொற்றிக் கொள்ளும்.

குடி நீர் நிலைகளில் அல்லது அவற்றின் அருகில் மலங்கழித்தாலோ அல்லது அங்கு மலம் கழுவச் செல்லுமிடத்து அல்லது நோயாளியின் துணிகளை குடிநீர் நிலைகளில் துவைக்கும் போது நோய்க்கிருமி குடிநீரை அடைந்து நோயை ஏற்படுத்தும்.

முக்கியமாகப் பாடசாலைச் சிறுவர்கள் சுகாதாரமற்ற நீரில் தயாரிக்கப்படும் ஜீஸ், ஐஸ்கிறீம் என்பனவற்றை அருந்துவதாலும் அடுத்து முதியோர்கள் வயோதிபம் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குன்றி இருப்பதன் காரணமாக இலகுவில் நெருப்புக்காய்ச்சல் ஏற்படும். ஏற்கனவே வேறு ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்டோர் ஆகியோரைப் பற்றீரியா தாக்கி நெருப்புக் காய்ச்சலை உண்டாக்கும்.

பற்றீரியா சுகதேகியை அடைந்து 14 நாட்களில் பெருகி குணங் குறிகளை வெளிப்படுத்தும். குணங்களாவன:-

நோயின் முதல் வாரத்தில் :-

இளைப்பு, காய்ச்சல், தலைவலி, நா உலர்வு, கை, கால் நோவு, இருமல் (சளிவராத வரட்டு இருமல்), மலச்சிக்கல் அல்லது சிலவேளை வயிற்றோட்டம்.

இரண்டாம் வாரத்தில்:-

இளம் சிவப்பு புள்ளிகள் மார்பிலும் வயிற்றிலும் தோன்றுதல். இது மூன்று நாட்களில் தானாக மறையும். வயிற்று நோ, மண்ணீரலும் ஈரலும் வீங்குதல் வயிற்றோட்டம்

மூன்றாம் வாரம்:-

நெருப்புக் காய்ச்சலைப் பின் தொடரக் கூடிய பல சிக்கல்கள். அதாவது குருதிச் சோகை, சளிச்சுரம் , நரம்பு பாதிப்பு, சிறுநீர்த் தொகுதித் தொற்று

நெருப்புக் காய்ச்சலுக்கு சரியான பூரணசிகிச்சை பெறாதவிடத்து ஒரு தடவை ஏற்பட்ட வியாதி முற்றி கோமாவும் தொடர்ந்து மரணமும் சம்பவிக்கும். அரைகுறையாக சிகிச்சை பெற்றோ அன்றி நோயின் பின் பூரண ஓய்வு எடாதவிடத்தோ மீண்டும் நோய் ஒரு வாரம் அல்லது அதற்குப் பின்பு ஏற்படலாம்.

★ குடிநீரைக் கொதிக்க வைத்து பருகுதல். அசுத்த நீரில் தயாரிக்கப்படக் கூடிய பானம் உணவு விசேடமாக ஜீஸ், ஐஸ்கிறீமைத் தவிர்த்தல்.

★ மலசல கூடத்தில் மலங்கழித்தல், மலங்கழித்த பின்னும் சாப்பிட முன்பும் குழந்தைகள் மண்விளையாடிய பின்பும் சவர்க்கார மிட்டுக் கைகழுவல்.

★ உணவு பானங்களை மூடி வைத்தல்.

★ நோயாளியைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல். என்பவற்றின் மூலம் நெருப்புக்காய்ச்சல் பரவாது தொற்றாது தடை செய்யலாம்.

செல்வி.எஸ்.சின்னத்துரை,
வைத்தீஸ்வராக் கல்லூரி.

# இயற்கை அனர்த்தங்கள்

**மண் சரிவு**

◊ இலங்கையில் குறிப்பாக மத்திய மலைநாட்டில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களுள் முக்கியம் பெறுவது மண்சரிவு என்பதாகும். கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை நுவரெலியா, ரன்தெனிகலை, மஸ்கெலியா போன்ற இடங்களில் மண்சரிவுகள் சாதாரண விடயமாக உள்ளது.

**மண்சரிவினை ஏற்படுத்தும் காரணிகளை**

01) இயற்கைக்காரணிகள்

02) மானிடக்காரணிகள்

என அடையாளம் செய்யலாம். முதலில் இயற்கைக் காரணிகளை எடுப்பின் பின்வருவன மண்சரிவினை ஏற்படுத்து கின்றன.

01) ஒருநாளில் 100மி.மீற்றர் மழைவீழ்ச்சிக்கு அதிகமான மழை பெய்யும் போது மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. விசேடமாக இரத்தினபுரி பிரதேச மண்சரிவுகள் இதற்கு உதாரணமாகும்.

02) பலத்த மழையின் போது சரிவான பகுதிகளில் உள்ள இலேசான மண் மண்சரிவுக்குள்ளாகும்.

03) நில நடுக்கம் மூலமும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

**மண்சரிவை ஏற்படுத்தும் மானிட காரணிகள் வருமாறு**

01) பயிர்ச் செய்கைக்காகக் காடு அழிப்பு.

02) நிலத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாமை.

03) நிர்மாணிப்பு வேலைகளில் சரியான திட்டமிடல் இன்மை.

04) பரிசோதனை இன்றி மண் அகழ்தல்.

05) பாரிய கற்களுக்கு வெடிவைத்து தகர்த்தல்.

06) இயற்கை நீரோட்டங்களுக்குத் தடை ஏற்படுத்தல்.

**மண் சரிவுப் பிரதேசங்களை**

01) ஏற்கனவே மண்சரிவு ஏற்பட்ட பிரதேசங்கள்.

02) எதிர்காலத்தில் மண்சரிவு ஏற்படும் பிரதேசங்கள்.

என அடையாளங் காணலாம். குறிப்பாக எதிர்கால மண் சரிவுப் பிரதேசங்களில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

01) நிலத்தில் (மலைச்சரிவுகளில்) வெடிப்புகள் ஆழமாக ஏற்படல்.

02) நிலம் கீழ் இறங்கலும் மலைச் சரிவுகளிலுள்ள மரங்கள் படிப்படியாக சரிவடைதல்.

03) பாரியகற்கள் கீழே மெதுவாகவும் படிப்படியாகவும் உருண்டு விழலும் அதன் காரணமாக மண்பரப்பு உட்பக்கமாகத் தள்ளப்படலும்.

04) மலைச்சரிவுகளில் உள்ள கட்டிடங்களில் அத்தி வாரத்தில் இருந்து கூரைவரை வெடிப்புகள் காணப்படல்.

05) திடீரென நீர் ஊற்றெடுத்தலும் சேறுஉருவாதலும்.

06) ஏற்கனவே காணப்பட்ட நீர் ஊற்றுகள் மறைதல்.

07) வெவ்வேறு மட்டங்களில் மண் மெது மெதுவாக கீழ் தள்ளப்படல்.

**மண்சரிவைத்தடுக்கும் வழிகள்**

01) பல்வேறுபட்ட பாதுகாப்பான நடவடிக்கை மூலம் மண்சரிவுப் பிரதேசங்களை பயன்படுத்தல்.

02) மலைச்சரிவுகளில் படிக்கட்டு முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.

03)சரிவுகளில் வடிகால் நீர்ப்பாய்ச்சல் ஒழுங்காக பராமரிக் கப்படல் வடிகாலமைப்பு சம உயரத்தில் பேணப்படல் அவசியம்.

04) மரங்களை சம உயரங்களில் நாட்டி காடுகளை உண்டாக்கல்.

05)இரும்பு வலைகளை உபயோகித்து மண்சரிவு ஏற்படக் கூடிய மண்ணை இறுகக் கட்ட வேண்டும்.

06)ஆழத்துக்கு குழி தோண்டி கொங்கிறீற்தூண், மரத்தூண், இரும்புத்தூண் என்பவற்றை நாட்டல்.

07) மேலதிக நீரை அகழிகள் முலம் வெளியேற்றல்.

**திரு. R. ஜெகதீஸ்வரன்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி.**

துளிகள்
THULIRGAL

# வித்தியாசம் காண்க




மேலே தரப்பட்டுள்ள படங்களில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

**விடை 06 ஆம் பக்கம்:**

# சோர்க் வர்ணம்
## (கட்டி வர்ணம்)

இவ்வர்ணம் பொதுவாக மெழுகுத் தன்மை கொண்டது. ஆனால் மெழுகு வர்ணம் வேறு உள்ளது. இவை எண்ணெய்த் தன்மை கொண்டது. எவ் ஊடகத்திலும் எளிதில் பற்றிக் கொள்ளக் கூடியது. மாணவர் கையாள்வதற்கு மிகவும் உகந்தது. இவ்வர்ணத்தினை கடினப்படுத்த அல்லது மென்மைப்படுத்த வேறு எந்தத் திரவமோ, தூளோ பயன்படுத்துவதில்லை. எனவே நேரடியாகப் பயன்படுத்துவது மட்டுமே ஆகும்.

வேறு வர்ணத்துடன் கலக்கவும் புதிய வர்ணம் உருவாக்கவும் இவ்வர்ண ஊடகம் சிறந்தது. பளபளப்புத் தன்மை கொண்டது. எண்ணெய் வர்ணத்தன்மை கொண்டது. நீண்டகாலக் கவர்ச்சித் தன்மை கொண்டது. ஒளி, நிழல் காட்ட இலகுவானது. உயிர்ப்புடன் கூடிய தன்மை கொண்டது.

இவை கடதாசி, காகிதம், அட்டை, துணி, பொலித்தீன், கண்ணாடி, மரப்பலகை, சீமெந்துச்சுவர், பிளாஸ்ரிக் இப்படியாகப் பல தள ஊடகங்களையும் பயன்படுத்தலாம். இவை எழுது கோல் போல் நீண்ட உருளை உரு கொண்டது. சதுரக்கட்டி உரு கொண்டது. வடிவங்களும் தரமும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. உதாரணமாக அற்லஸ், ஹோம்ரண்பஸ், பென்டியம், றிச்சாட் இவை போன்ற வர்ண இனம் அடங்குகின்றது. மேலும் கிரேயோன் என்பன மெழுகுத் தன்மை கொண்டது. இவை பற்றிக் அலங்காரம் போன்ற அலங்காரச் சித்திரங்களுக்கு சிறந்தது. சுரண்டல் சித்திரம், ஒளித்தெறிப்புச் சித்திரம், கலப்பூடகச் சித்திரம் இவைகளுக்குச் சிறந்தது. சோக் வர்ணம் பாவணையில் இலகுவானதும், கவர்ச்சியும் கொண்டது. காட்சி, கருத்து வெளிப்பாடு, அலங்காரம் போன்ற சித்திரங்களை ஆக்கும் போது தொழில் நுட்பத்திறன் முறைகளை இலகுவில் உட்புகுத்த முடியும். நீண்ட நேரம் எடுத்தோ அல்லது குறைந்த நேரம் எடுத்தோ

# கழுவ வேண்டாம்



புதிய வேலைக்காரி மீனைச் சமைத்து சாப்பிடும் மேசையின் மேல் வைத்தாள். மீன் துண்டுகளை நன்கு கவனித்த முதலாளியம்மா, சமைக்கிறதுக்கு முன்னாடி மீனை நல்லா கழுவினியா? என்று கேட்டாள்.

ஏம்மா எப்பவும் நீரிலேயே வாழும் மீனை எதற்காக மீண்டும் ஒரு முறை நீர் விட்டுக் கழுவ வேண்டும்? என்று வியப்புடன் கேட்டாள் வேலைக்காரி.

படைப்புக்களை ஆக்க முடியும். இலகுவில் உலரவோ, அன்றி இடிந்து கசியும் ஈரத்தன்மையோ கிடையாது. இவை இதன் சிறப்புத் தன்மை. ஆனால் எண்ணெய் ஊடகத்தில் கரைக்க முடியும். கழுவமுடியும். வளிப்பானால் வளித்துவிடவும் கூடியது. எனவே இவ்வர்ணத்தினை மாணவர்களுக்கு உகந்த முறையில் கலப்புச் செய்து தயாரிக்கப்பட்டு புத்தகக் கடைகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இதன் பண்பு கூடிய பதார்த்தங்கள் விலை கூடியது. ஓவியர்கள் பாவிப்பதும் ஆக உள்ளது.

ம.டொமினிக் ஜீவா,
யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.

# பாதி சாப்பிட்டால்

சாப்பிடவந்தவர் :

அதோ! அவர் சாப்பிடுகிறாரே
போண்டா அதைக் கொண்டு வா

சர்வர்:-

"பாதி சாப்பிட்டுட்டாரே சார்"



மருதூர் என்ற சிற்றூரில் துறவி ஒருவர் தங்கியிருந்தார். அறிவுக் கூர்மை மிகுந்தவராக அவர் விளங்கினார். அந்த ஊர் மக்களுக்கு எந்தச் சிக்கல் வந்தாலும் அவரிடம் வருவார்கள். அவரும் அவர்கள் சிக்கலைத் தீர்த்து வைப்பார்.

இதனால் ஊர் மக்கள் அவரை மிகவும் மதித்தார்கள். துறவியின் புகழ் நாடெங்கும் பரவியது. அந்நாட்டு அரசனும் அவரைப் பற்றி கேள்விப்பட்டான்.

எல்லோரும் துறவியைப் புகழ்கிறார்களே அது உண்மையா என்பதை அறிய வேண்டும். அவர் அறிவை சோதனை செய்ய வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. தச்சர்களை அழைத்த அவன். "இரண்டு அடி நீளமுள்ள தேக்கு மரத துண்டுகளை எடுங்கள் அதன் அடிப்பகுதி எது? நுனிப்பகுதி எது? யாரும் கண்டு பிடிக்கக் கூடாது. ஒரே அளவாக இழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றான்.

# அறிவுக்குச் சோதனை

அவர்களும் அப்படியே செய்து கொண்டு வந்தார்கள். அந்த மரத்துண்டைப் பார்த்த அரசன் மகிழ்ச்சி அடைந்தான். தூதன் ஒருவனிடம் அந்த மரத்துண்டைத் தந்தான். "நீ மருத்தூருக்குச் செல். ஊர் பெரியவர்களிடம் இந்த மரத்துண்டைக் கொடு. 'இதன் அடிப்பகுதி எது? நுனிப் பகுதி எது? அரசர் உங்களைக் கண்டு பிடித்துச் சொல்லச் சொன்னார். கண்டு பிடிக்க இயலா விட்டால் ஆயிரம் பணம் கட்ட வேண்டும் என்றார்" என்று சொல் என்றான்.

தூதனும் மருத்தூரை அடைந்து ஊர்ப் பெரியவர் களைச் சந்தித்தான். மரத்துண்டை அவர்களிடம் தந்தான். அரசர் சொன்னதைச் சொன்னான். அவர்கள் அந்த மரத் துண்டை நன்கு ஆராய்ந்தார்கள். அதன் அடிப்பகுதி யையும், நுனிப்பகுதியையும் யாராலும் கண்டு பிடிக்க முடியாதே.



ஆயிரம் பணம் கட்ட வேண்டும் என்று நினைத்தார்கள்.

துறவியின் நினைவு அவர்களுக்கு வந்தது. அந்த மரத் துண்டைத் துறவியிடம் காட்டினார்கள். அரசர் வைத்த சோதனையையும் சொன்னார்கள்.

சோதனை தனக்குத் தான் என்பது அவருக்குப் புரிந்தது. எப்படிக் கண்டு பிடிப்பது என்று சிந்தித்தார். பெரியவர்களைப் பார்த்து அவர் இந்த மரத்துண்டு முழுமையும் மூழ்க வேண்டும். பெரிய பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வாருங்கள்" என்றார். அவர்களும் பெரிய பாத்திரம் ஒன்றில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்தார்கள்.

ஒரு கயிற்றில் அந்த மரத்துண்டின் நடுப்பகுதியைக் கட்டினார். கயிற்றின் இன்னொரு முனையைப் பிடித்துத் தூக்கினார். மரத்துண்டு அப்படியே வானத்தில் நின்றது. அந்தக் கயிற்றை பாத்திரத்துக்கு மேலே கொண்டு வந்தார். மரத்துண்டு

---

**பக்கத்தில் இருக்கும் போதே மாறினால்**

புதிதாக லாரிவாங்கிய ஒருவர் டிரைவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு வண்டியை ஓட்டச் சொன்னார். வண்டி ஓடத் தொடங்கியதும் கடமுட என்று சத்தம் கேட்டது.

உடனே அவர் என்ன சத்தம் கேக்குது? என்று டிரைவரைக் கேட்டார்.



நான் கியரை மாற்றினேன் அதனால் தான் இந்தச் சத்தம் என்றான் டிரைவர்.

நான் பக்கத்தில் இருக்கும் போதே நீ கியரை மாற்றினால் நான் இல்லாத போது நீ என்ன செய்ய மாட்டாய்? என் வண்டியை விட்டு இறங்கு என்று கோபத்துடன் கத்தினார் அவர்.

## மழைக்குத் தேவை குடை

முதலாளி :-


தோட்டத்து செடிகளுக்கு எல்லாம் தண்ணீர் ஊத்திட்டியா

தோட்டக்காரன்:-

ஐயா! நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது?

முதலாளி:-

அதனால் என்ன? குடையைப் பிடித்துக் கொண்டு நீர் ஊற்ற வேண்டியது தானே?



தண்ணீருக்கு அருகே சிறிது உயரத்தில் நின்றது. பிறகு அவர் மரத்துண்டை ஆடாமல் அசையாமல் கீழே இறக்கினார். மரத்துண்டு சமமாகத் தண்ணீரைத் தொட்டது. தண்ணீருக்குள் மூழ்கத் தொடங்கியது. அதன் ஒரு முனை சிறிது வேகமாக மூழ்கியது. இன்னொரு முனை மெல்ல மூழ்கியது.

அவர் செய்வதை எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெரியவர்களைப் பார்த்து அவர், " என்ன நடந்தது என்பதை கவனித்தீர்கள் அல்லவா? நுனி மரத்தைவிட அடிமரம் எடை அதிகமாக இருக்கும். எடை அதிகமான பகுதி வேகமாக மூழ்கும். முதலில் மூழ்கிய பகுதி அடிமரம் என்றார். மகிழ்ந்த அவர்கள் தூதனிடம் மரத்துண்டைக் கொடுத்தார்கள். அடிப்பகுதி எது என்று கண்டு பிடித்த முறையையும் சொன்னார்கள்.

அரசனிடம் வந்த தூதன் நடந்ததை எல்லாம் சொன்னான் துறவியின் அறிவுக் கூர்மையை நினைத்து வியந்தான் அரசன்.

# அறிந்து கொள்ளுங்கள்

01. யோமுரிஷிம்பன் - உலகில் அதிகம் விற்பனையாகும் யப்பானிய பத்திரிகை
02. 14 மாநகர சபைகள் - இலங்கையில் உள்ளன.
03. தீபாமேத்தா "Fire" படத்தின் இயக்குநர்.
04. இலங்கையின் பரப்பளவு 65610 சதுர கிலோ மீற்றர்.
09 - மாகாணங்கள், 25 - மாவட்டங்கள், 22 - தேர்தல் மாவட்டங்கள், தேசியமரம் - நாகமரம், தேசிய மலர் - நீலோற்பலம், தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம், தேசியப் பறவை - காட்டுக்கோழி, தேசிய மிருகம் - யானை
05. இலங்கையில் போர்த்துக்கேயர் காலம் : 1505 -1658
டச்சுக்காரர் காலம் : 1658 - 1796
ஆங்கிலேயர் காலம் : 1796 - 1948
06. 1802இல் இலங்கையானது பிரித்தானியரின் முக்கிய குடியேற்ற நாடானது
07. சிறீ விக்கிரம ராஜ சிங்கன் - கண்டியை ஆண்ட கடைசி நாயக்க மன்னன்.
08. 1956இல் யூன் 5இல் தனிச் சிங்களச் சட்டம் அமுலாக்கப் பட்டது.
09. சேர் பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் - கலாநிதி ஆனந்தகுமாரசாமி.
10. "கவிசிலுமினா" இரண்டாம் பராக்கிரமபாகு எழுதிய காவியம்.
11. இலங்கையில் வர்த்தமானி 1802 முதன் முதல் வெளியிடப் பட்டது.
12. 1958இல் இலங்கைப் போக்குவரத்துச் சபையானது உருவானது (இ.போ.ச)
13. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்த
14. "மின்னேரியாத் தெய்வம்" எனப் பூஜிக்கப்படுபவன் மகாசேனன்.
15. வட்டவளை - இலங்கையில் ஆகக் கூடுதலாக மழை பெறுகின்றது.

மறிச்சுக்கட்டி - மிகக்குறைந்த மழையைக் கொண்டுள்ளது.

16. இலங்கையில் உயரமான குன்று கொக்காகல, மிகப் பெரிய குளம் சேனநாயக்கா சமுத்திரம்.

17. இலங்கையின் தலைநகர் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே.

18. உத்தியோக பூர்வ வதிவிடங்கள்

| | | |
|---|---|---|
| ஜனாதிபதி | - | ஜனாதிபதி மாளிகை |
| பிரதமர் | - | அலரிமாளிகை |
| சபாநாயகர் | - | மும்தாஜ் மஹால் |

19. இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்யும் ஏடு "கன்சார்ட்" எனப்படும்.

20. 1870இல் இலங்கையின் புகையிரதச் சேவை ஆரம்பிக்கப் பட்டது.

21. ஐரோப்பிய கட்டமைப்பு என்ற அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் "யூரோ" என அழைக்கப்படும் பொது நாணயத்தைப் பயன்படுத்துகின்றன. 2002 யூலை 1ஆம் திகதியிலிருந்து இப் பொதுப்பணம் புழங்கத் தொடங்கும்.

22. சர்வதேச நிதியம் உலக வங்கி என்பன 1945இல் உருவானது.

23. உத்தியோக பூர்வ செய்தி நிறுவனங்கள்.

| | | |
|---|---|---|
| இலங்கை | - | லங்காபுவத் |
| இந்தியா | - | பி.ரி.ஐ.யு.என்.ஐ |
| பிலிப்பைன்ஸ் | - | பி.என்.ஏ |

## நல்ல நூலால் தைப்பதுதானே

கிராமத்து நோயாளி ஒருவன் ஆபரேசன் செய்து கொண்டு எழுந்து நடப்பதைக் கண்ட நர்சு, இப்படி எல்லாம் நடந்தால் தையல் பிரிஞ்சிடும்னு தெரியாதா? என்று கோபத்துடன் கேட்டாள்.

அதற்கு அவன் "பணம் வாங்கிறீர்கள்தானே நல்ல நூலால் தைப்பதற்கு என்ன? என்று எரிந்து விழுந்தான்.



| | | |
|---|---|---|
| ஜப்பான் | - | கியோடேகிகி |
| ரஸ்யா | - | டாஸ் |
| மலேசியா | - | பெர்நாமா |
| அமெரிக்கா | - | யு.பி.ஏ |
| இங்கிலாந்து | - | ராய்ட்டர் |
| பிரான்ஸ் | - | ஏ.எவ்.பி |
| சீனா | - | என். சி.என்.ஏ |

24. INTERPOL - சர்வதேச பொலிஸ் நிறுவனமாகும்.
25. இலங்கை கிரிக்கட் அணித் தலைவர் - சனத் ஜெயசூரிய
26. அன்றேஅகாஸி - அமெரிக்கா டெனிஸ் வீரர்
27. 1815இல் இலங்கையில் துடுப்பெடுத்தாட்டம் ஆரம்பிக்கப் பட்டது.
28. கிரிக்கட் கிண்ணங்கள், சிங்கர்,வில்ஸ், கொகா கோலா முதலியன.
29. பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களின் மறுமலர்ச்சி முன்னோடிகள் அநாகரிக தர்மபாலா, சிறீலசிறி ஆறுமுகநாவலர், எம். சி. சித்திலெப்பை.
30. 6ஆம் பராக்கிரமபாகு எழுதிய வைத்திய நூல்கள் - வைத்திய சிந்தாம்மணி, யோகரத்னாகாய.
31. எவரெஸ்ட் அதி உயர்ந்த மலைச் சிகரம் (29002 அடி)
32. சோழரை இலங்கையிலிருந்து துரத்தி பொலநறுவை இராசதானியை 1ம் விஜயபாகு மன்னன் ஆரம்பித்தான்.
33. கலிங்க மாகன் கி.பி 1214இல் இந்தியாவிலிருந்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றினான்.
34. நன்நீர் - மீன்வளர்ப்பு, வளவை, தம்புள்ள இடங்களில் உள்ளன.
35. புவியின் பரப்பளவு 50 மில்லியன் சதுரக்கிலோமீற்றர் ஆகும்.
36. ஒலியின் உரப்பை அளப்பதற்கு ஒலிமட்டமானி பயன்படுத்தப்படும்
37. 1998 ஆம் ஆண்டு இலங்கையின் குடித்தொகை 18.9 மில்லியன்.
38. இரத்தினக் கற்களின் நிறையை "கரற்று" எனப்படும் அலகினால் அளப்பர்.
39. 13 தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
40. H.I.V வைரஸைக் கண்டு பிடித்தவர் டாக்டர் லயூக் மொண்டானியா.

41. "கிரோஷிமா" நகர் மீது 6-8-1945ஆம் ஆண்டு அணுகுண்டு வீசப்பட்டது.
42. புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகள் - இந்தோனேசியா, தாய்வான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென் கொரியா.
43. முறைசாரா உதவியளிக்கும் நிறுவனம் - சீடா
44. இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் - உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி.
45. அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திடாத நாடு பாகிஸ்தான்.
46. நோபல் பரிசு வழங்கப்படுவது பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய துறைகளுக்கு.
47. பனிப்போருடன் தொடர்புடைய நாடுகள் - சோவியத் ஒன்றியம், அமெரிக்கா.
48. வட தென் துருவத்தை முதலில் அடைந்தவர்கள் றொபே பியாரி, அமுன்ஸ்டென்.
49. எவரெஸ்டில் ஏறிய முதல் பெண் மணி ஜங்கோது பேய்
50. விண்வெளியில் மிதந்த முதல் மனிதன் - அலெக்லி யோனோவ்
51. "கலைவாணர்" என அழைக்கப்படுபவர் என்.எஸ். கிருஷ்ணன்.
52. "ப்யூரி" என்ற நாவலை எழுதியவர் - சல்மான் ருஸ்டி
53. ஆறுகளே இல்லாத நாடு சவுதி அரேபியா
54. சீன அரிச் சுவடியில் 214 எழுத்துக்கள் உள்ளன. தமிழில் 247
55. இலங்கையில் 2001ல் 13ஆவது குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்டுள்ளது.
56. WEB என்பது இன்ரநெற்றில் உள்ள இலட்சக்கணக்கான கணனிக் கோவைகளின் வலையமைப்பாகும்.
57. MDRT மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாடு 1927இல் ஆரம்பமானது. ஆயுட்காப்புறுதி சம்பந்தப்பட்ட துறையில் உலகலாவிய ரீதியில் திறமை வாய்ந்தோர் இதில் கலந்து கொள்வார்கள்.
58. புத்தர்பெருமானின் முந்தைய பிறப்புக்களில் நிகழ்ந்த சம்பவங்கள் ஜாதகக் கதைகளென அழைக்கப்படும்.
59. உலகில் மிகப் பெரிய குளிர்பாலை வனம் - கோபி
60. ஆங்கில அகராதியை முதல் முதலில் தொகுத்தவர். சாமுவேல் ஜோன்சன்.

**மாணவர்களே!**


இதழ் 3இல் அறிமுகமாகிய வார்த்தை விளையாட்டு – 01 இல் பல மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். மிக்க மகிழ்ச்சி.

பாடசாலைகளின் 1ஆம் தவணை விடுமுறை காரணமாக பல மாணவர்களால் போட்டியில் கலந்து கொள்ளமுடியவில்லை. அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க வார்த்தை விளையாட்டு – 01 இல் பங்கு பற்றுவதற்கான முடிவுத்திகதை 15.05.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வார்த்தை விளையாட்டு –1 இல் பரிசு பெற்றவர்கள் விபரம் இதழ் – 5 இல் வெளியிடப்படும்

ஆசிரியர்

## சிறுவர்களுக்கான வார்த்தை விளையாட்டு - 02




| | |
|---|---|
| கள்ளி | ஒட்டாவா |
| ஜாங்கிரி | மாதாஜி |
| பகடை | கிரீஸ் |
| பிஸ்மார்க் | சிப்பி |
| கடை | ஒளி |
| நாசிக் | கம்பீரம் |
| ஜாபர் | பழி |
| சிவாஜி | டாக்சி |
| ரிதம் | பீகிங் |

**மாணவர்களே!**

உங்கள் புத்திக்கூர்மையை பிரயோகித்து தரப்பட்ட சொற்களில் இருந்து, இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை தெரிந்தெடுத்து நிரப்பி **05-06-2006**ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறும் முதல் பத்து அதிஸ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி: பாக்யா காகிதாதிகள், இல.121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

### வார்த்தை விளையாட்டு விண்ணப்பப் படிவம்

பெயர் : ................................................................

வகுப்பு : ................................................ பிரிவு: ..............................

பாடசாலை : ................................................................

61. உலக வங்கி 1945இல் உருவாதல் (சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கியையும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தையும் உலக வங்கி கொண்டுள்ளது)
62. 1945இல் தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் தாபனத்தில் 190க்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.
63. "வீட்டோ அதிகாரம்" கொண்ட நாடுகளாவன - சீனா. பிரான்ஸ் , ருசியா, ஐக்கிய அமெரிக்கா, மக்கள் சீனக்குடியரசு.
64. ஐ.நா சபையின் சர்வதேச நீதிமன்றம் ஒன்லாந்து, நாட்டிலுள்ள "தகேக்" நகரிலுண்டு.
65. சார்க்-(SAARC) இது தென்னாசிய பிராந்திய கூட்டுறவுக் கான அமைப்பு எனப்படும்.
66. SAPTA என்பது "தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு.
67. ஈராக்குக்கான ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர் குழு UNSCON எனப்படும்.
68. G7, G24, G77, G8 நாடுகள் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு கூட்டணைப்பிலுள்ளன.
69. பழைய உலக அதிசயங்களாவன : பிரமிட்டுக்கள், தாஜ்மஹால், சீனப் பெருஞ்சுவர், சுதந்திரச் சிலை, நாயகரா நீர்வீழ்ச்சி, சாய்ந்த கோபுரம், தொங்கு தோட்டம்.
70. உலக கணணி வலை அமைப்பு www எனப்படும். (World wid web)
71. 1802இல் இலங்கையில் வர்த்தமானி வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.
72. ஒலிம்பிக் போட்டியில் உள்ள நிற வளையங்கள் குறிக்கும் கண்டங்கள்

| | | |
|---|---|---|
| சிவப்பு | - | அமெரிக்கா |
| பச்சை | - | அவுஸ்திரேலியா |
| மஞ்சள் | - | ஆசியா |
| நீலம் | - | ஐரோப்பா |
| கறுப்பு | - | ஆபிரிக்கா |

73. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (VETO POWER) இரத்த அதிகாரம் கொண்ட நாடுகள் சீனா, பிரான்ஸ், பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, ருஷியா.

74. 10.12.1901 இல் நோபிள் பரிசு முதன் முதலாக வழங்கப்பட்டது.

75. விளையாட்டு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நீதிமன்றம் சுவிற்சலாந்தில் உள்ளது.

76. மொடோபினில் ஓர் வித ஊக்க மருந்தாகும்.

77. ஜேர்மனி தேசத்தை இரு கூறாக்கி (மேற்கு, கிழக்கு) நடுவில் எழுதப்பட்ட சுவரின் பெயர் - பேர்ளின் ஆகும்.

78. 11.09.2002இல் அமெரிக்கா மீது விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

79. மியான்மரில் ஜனநாயகத்திற்காக போராடிவருபவள் - ஆங்ஷான் சூசி

80. பரிஸ் நகரில் 9வது உலக தடகளப் போட்டி (2003) நடைபெற்றது.

81. அநுராதபுரத்திலுள்ள சிறிமகாபோதி விருட்சம் - சங்கமித்தவால் நடப்பட்டது.

82. அரசி அனுலாதேவி முதலாவது பிக்குனியாக விளங்கினார்.

83. கீர்த்தி சிறீமேவன் காலத்தில் புனித தந்ததாது இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

84. பிராமி வரிவடிவ முறை மகிந்த தேரரின் வருகையின் பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டது.

85. மொத்தச் சனத்தொகையில் சிங்களவர் 74 வீதமாகும்.

86. பாதுகாப்புச் சேவைக்காக ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் மலே இனத்தவர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர்.

87. 06 குடியேற்றங்கள் இணைந்து அவுஸ்திரேலியா சமஷ்டி உருவானது.

88. சோவியத் அரசினால் தொழிலாளர் நலத்திற்காக வழங்கப்படுவது லெனின்பட்டி விருது.

89. மக்சேசே விருது பிலிப்பைன்ஸ் நாட்டினால் வழங்கப்படுகின்றது.

90. உலக வங்கியின் தலைமையகம் வாஷிங்டனில் அமைந்துள்ளது.

அறிஞர்கள்

91. யோசவ் பிறீஸ்லீ - நைதரஸ் ஒட்சைட் எனப்படும் சிரிப்பு வாயுவைக் கண்டுபிடித்தார்.
92. சேர். கம்பிறிடேவி - சுரங்கத் தொழிலாளருக்கு உதவும் காவல் விளக்கினை (டேவிவிளக்கு) உருவாக்கினார்.
93. கெப்லர் - கோள்கள் சூரியனைச் சுற்றிவரும் நீள் வளைய வீதியைக் கண்டறிந்தார்.
94. சார்ல்மாக்ஸ் - "மூலதனம்" என்ற நூலின் ஆசிரியர்.
95. வில்கம் வூண்ட் - நவீன உளவியலின் தந்தை
96. கலிலியோகலிலி - ஊசல் தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.
97. லியனாடோடாவின்சி - "மொனாலிசா, கடைசி இரவுப் போசனம்" ஆகிய ஓவியங்களை வரைந்தார்.
98. மார்க்கோணி - வானொலியைக் கண்டுபிடித்தவர்.
99. பெஞ்சமின் பிராங்ளின் - மூக்குக் கண்ணாடி இடியேறு தாங்கி ஆகியவற்றைக் கண்டுபிடித்தார்.
100. மின் குமிழ் - தோமஸ் அல்வா எடிசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

**பக்கம் 07 இன் புதிருக்கான விடை**

1. 150 நிமிடங்கள் என்பது இரண்டரை மணி நேரந்தான்.
2. திருடன் 39 வது நாளில் பிடிபடுவான்.
3. ஒரு குருவியும் இருக்காது, வேட்டைக்காரனின் வேட்டுச் சத்தம் கேட்டவுடன் எல்லாக் குருவிகளும் பறந்து போயிருக்கும்.
4. நான்கு குருவிகள் மூன்று பூக்கள்.
5. எழுபத்து ஐந்து வெட்டுக்கள் வெட்ட வேண்டும். ஏனென்றால் ஒரு வேட்டியை நான்கு துண்டாக்க மூன்று வெட்டுக்கள் தேவை. இருபத்து ஐந்து வேட்டிகளுக்கு எழுபத்து ஐந்து வெட்டுக்கள் தேவை.

கல்வியுலகில் 16ஆவது ஆண்டில்

# நாவலர் இன்ஸ்ரிரியூட்

**தரம் 1 முதல் O/L வரை**

**தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பு**

**A/L 2007,2008**

**கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள் நடைபெறுகின்றன.**

தகுதி அனுபவம் திறமை வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை



**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**


40. புவிதான சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது என்பதை முதன் முதலில் நிருபித்தவர் - கலிலியோகலிலி
41. இரும்புச் சம்மட்டி என அழைக்கப்பட்டவர் ஐக்கிய ராட்சிய பிரதம மந்திரி மாகிரட்தச்சர்
42. யாழ்ப்பாணத்தைக் சேர்ந்த திருமுத்தையா என்பவரே முதல் தமிழ் தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
43. தேசிய விளையாட்டுக்களாவன
    இந்தியா - கொக்கி / கபடி
    இலங்கை - எல்லே
    யப்பான் - கராட்டி / யூரோ
    அவுஸ்திரேலியா - கிரிக்கட்
    துருக்கி - மலயுத்தம்
    ஸ்கொத்லாந்து - காலபந்து
44. மக்கள் வங்கியின் சேமிப்புத்திட்டங்களாவன
    ஜனஜன/ஆசிரியர் சேமிப்பு (குருகேசு) பிரணம (உள்ளூ ராட்சி ஊழியர்) சவசெவன (மருத்துவ பகுதியினர்) குழந்தைகள் சேமிப்பு / மாணவர் மலர்ச்சி யாத்திரைக் கணக்கு/ மகளிர் அதிஸ்டம் / முதலீட்டுச் சேமிப்பு சாதாரண சேமிப்பு

# Mobile@net Computer Services

MCS *324, Palaly Road, Jaffna.*

***Diploma Courses***

- MS Office
- Desktop Publishing
- Video Editing
- Web Developing
- Computerized Accounting
- VB .net
- Visual Basic
- MAYA
- AutoCAD

***Workshop Courses***

Internet & Email Hardware Network

***National Courses***



GIT for A/L Students
ICT for O/L Students


***Degree Courses***

BIT University of Colombo (External)
(Bachelor of Information Technology)

BIT

***International Courses***

Microsoft Certified Systems Engineer
Microsoft Certified Systems Administrator
ComTIA A+(Hardware) / N+ (Networking)
Microsoft Certified Software Developer
Microsoft Certified Professional
Cisco (CCNA/CCNP)
SUN Certified Java Programmer



*****Supported by UNDP/JRRP*****

## அடங்காதவர்களை அடக்க



சிறைக்காவலர் வேலைக்காக நேர்முகத் தேர்வுக்கு வருபவரைப் பார்த்து "உள்ளே உள்ள கைதிகள் எல்லோரும் கொடுமையானவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள் உம்மால் அவர்களைக் கட்டுப் படுத்தி அடக்க முடியும் என்று நினைக்கிறீரா?" என்று கேள்வி கேட்டார் ஒரு அதிகாரி.

கவலைப்படாதீங்க என்னால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும் அப்படி முடியலேன்னா யார் யார் எனக்கு அடங்கவில்லையோ அவர்களை எல்லாம் வெளியே விரட்டிவிடமாட்டேனா? என்று பதில் சொன்னார் நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்.



## கொடுத்தால் கவலை இல்லை

பஞ்சாப் ரெஜிமெண்டைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் பரசூட் மூலம் கீழே குதிப்பதற்கான பயிற்சி பெறுவதற்காக விமானத்தில் ஏறினர்.

குதிக்க வேண்டிய நேரம் வந்தது "இப்பொழுது தரையிலிருந்து எவ்வளவு உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருக்கின்றது? என்று கேட்டான் ஒரு வீரன்

அறுநூறு அடி உயரத்தில்" என்று பதில் வந்தது. விமானத்தை 400 அடி உயரத்துக்கு இறக்குங்கள் அப்பொழுது தான் நாங்கள் இருவரும் குதிக்க முடியும் என்று பதில் சொன்னான் அவன்.

"400 அடியா? அங்கு இருந்து குதித்தால் பரசூட் விரி வதற்குள் நீங்கள் பூமி யில் மோதி விடுவீர் கள்" என்று விளக்கி னான் மேலதிகாரி.




"குதிப்பதற்கு பரசூட் தாரீங்களா? அப்ப எவ்வ ளவு உயரமாக இருந்தா லும் கவலை இல்லை என்று சொன்னார்கள் இருவரும்

# Babi Com Digital Media

சகலவிதமான அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், விளம்பர அட்டைகள், பெயர் பலகைகள் ஆகியவை சிறந்த முறையில் கம்பியூட்டர் மூலம் நவநாகரீக டிசைன்களில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



திருமணம், பிறந்தநாள், புதுமனைப் புகுவிழா, பூப்புனித நீராட்டுவிழா மற்றும் பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்கள் அனைத்தினையும் புகைப்படம் எடுக்கவும், வீடியோ எடுக்கவும் **Albam** செய்வதற்கும் யாழ் நகரில் தலை சிறந்த இடம்

## பபி கொம் டிஜிட்டல் மீடியா

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
T.P: 0777 286218